தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு

முற்றம்

விலை ரூ. 5/- மலர் 12 இதழ் 05 செப்டம்பர் 2010

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் குழு கூட்டமைப்புகள்.. ஒரு பார்வை...



“சிறப்பாகச் செயலாற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஊக்குவிக்கும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவிலான மணிமேகலை விருதுகளை 2006-07ஆம் ஆண்டு முதல் அரசு தோற்றுவித்துள்ளது.”

டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,

மேலாண்மை இயக்குநர்,

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்.

சுய உதவிக் குழுக்கள் தனியாக சாதிக்க முடியாததை அவை கூட்டமைப்பில் இணைந்து தங்களுடைய ஆற்றல்களையும் வளங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலமாக சாதிக்கலாம். 2002ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணையின் அடிப்படையில் மாநிலத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இந்த கூட்டமைப்புகள் செயலிழந்த நிலையில் காணப்பட்டதால் 2008ஆம் ஆண்டில் அவற்றை அனைத்து தரப்பு மக்களையும் உள்ளடக்கி அனைவரின் பங்கேற்புடன் செயல்படும் வகையில் திருத்தியமைக்க அரசு உத்தரவிட்டது. கடந்த நான்காண்டுகளில் மகளிர் திட்டத்தின் சார்பில் 2,653 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

வங்கிக் கடன் பெற ஏதுவாக மறுசீரமைக்கப்பட்ட அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975ன் கீழ் ‘சங்கங்களாக’ பதிவு செய்திட அரசு ஆணையிட்டது.

சிறப்பாக செயல்படும் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகளுக்கு 2009-10ஆம் ஆண்டு முதல் தலா ரூபாய் ஒரு இலட்சம் ஊக்க நிதியாக அறிவித்து, அதற்கென அரசு ரூ. 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் முக்கியமான பொறுப்புகளில் ஒன்று நிதி இடையீட்டாளர் பணியாகும். தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகள் வங்கியிலிருந்து பெருங்கடன் பெற்று தங்களது உறுப்பினர் குழுக்களுக்கு கடன் வழங்கலாம். 2010-11ஆம் ஆண்டில் 45 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பல்வேறு வங்கிகளால் ரூ. 11.53 கோடி பெருங்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களிடையே ஒற்றுமை மற்றும் அணிப்பற்றினை மேம்படுத்த ஒவ்வொரு ஆண்டும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் வட்டார மற்றும் மாவட்ட அளவில் கலைப்போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மகளிர் குழு கூட்டமைப்புகளும், சுய உதவிக் குழுக்களும், அவைகளின் உறுப்பினர்களும் மேலும் பல சாதனைகளை படைத்திட வாழ்த்துகிறேன்!

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

கோவை மாவட்டம் குங்குமம் மகளிர் சுய உதவிக் குழு » 4

இக்குழுவின் உறுப்பினர்கள் மகளிர் திட்டம் மூலமாக அளிக்கப்பட்ட பயிற்சிகளில் ஊக்கத்துடன் கலந்து கொண்டு, பல்வேறு பயிற்சிகளைப் பெற்றுள்ளனர். உறுப்பினர்களின் ஒற்றுமையான செயல்பாட்டின் காரணமாக குங்குமம் மகளிர் குழு வெற்றிப் பாதையில் நடைபோட்டு வருகிறது.

அரசு வேலைவாய்ப்பில் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு 20 விழுக்காடு இட ஒதுக்கீடு தமிழக அரசு அவசரச் சட்டம் » 13

தமிழ் வழியில் படித்தவர்களுக்கு மத்திய அரசு வேலையிலோ, மற்ற மாநில அரசுகளின் வேலையிலோ, தனியார் துறையிலோ மிகக் குறைவான வாய்ப்புகளே உள்ளன. ஆகையால் மாநில அரசுப் பணிகளில் அவர்களுக்கு முன்னுரிமை தேவைப்படுகிறது.

22

கண் நோய்களும் தவிர்க்கும் முறைகளும்

வெற்றியை நோக்கி ஒரு பயணம்

12

24

வளர்க வணிகம்

மொத்தமாய் உழைத்து மெத்தவே உயர்வோம்

- மாண்புமிகு. துணை முதலமைச்சர் திரு. மு. க.ஸ்டாலின்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம் 26

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 12 இதழ் 05 செப்டம்பர் 2010 விலை ரூ. 5/-

கௌரவ ஆசிரியர்
டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

ஆசிரியர்
திரு. எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
முனைவர். ம. மனோகர சிங்
கூடுதல் இயக்குநர்

ஆசிரியர் குழு
திரு. கு. இராமமூர்த்தி
கூடுதல் இயக்குநர்

திருமதி. க. ராஜம்
கூடுதல் இயக்குநர்

திருமதி. எப். இன்னசென்ட் திவ்யா
பொது மேலாளர்

திருமதி. ந. வேம்பு
நிதி ஆலோசகர்

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்
திருமதி. மாலதி ஹெலன்
தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்
திரு. வெ. இராமமூர்த்தி
மக்கள் தொடர்பு அலுவலர்

உதவி ஒருங்கிணைப்பாளர் - முற்றம்
திரு. ஏ. கண்ணன்

கணக்கர்
திருமதி. சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
திரு. மு. செல்வம்

பிழை திருத்துபவர்
திரு. எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தபால் பெட்டி எண். 3226
100, அண்ணா சாலை, கிண்டி,
சென்னை - 600 032.
தொலைபேசி: 044-42085804/05/06
தொலைநகல்: 044-4202 7635,
044-2235 2751

www.tamilnaduwomen.org/mutram
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து

அன்புள்ள வாசகர்களுக்கு,

ஒரு நாட்டின் வளர்ச்சியை அளவிடுவதற்கு கல்வி ஒரு முக்கிய அளவுகோலாகும். கல்விப் பணியை சிறப்பாக செய்யும் பொறுப்பு ஆசிரியர்களிடமே உள்ளது. ஆசிரியர் பணி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பணியாகும். குழந்தைகளை ஒழுக்கம் உள்ளவர்களாகவும், அறிவுள்ளவர்களாகவும், பொறுப்புள்ளவர்களாகவும், திறமை மிக்கவர் களாகவும், அனைத்தையும் விட சமூக நல பண்பு மிக்கவர்களாகவும் உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடமே உள்ளது. இவைகள்தான் ஒரு நாட்டையே கட்டியெழுப்ப தேவையான திடமான அடித்தளமாகும்.

இப்படிப்பட்ட புனிதமான பணியை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கென பல சிறந்த குணங்கள் தேவைப்படுகின்றன. மாணவர்களுக்கு கல்வி அறிவை அளிப்பதில் பாகுபாடு இல்லாமல் பணியாற்றுவது, மாண வர்களுக்கும், சமுதாயத்திற்கும் எடுத்துக் காட்டாக விளங்குவது, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது போன்ற சமூக சேவைகளில் ஈடுபடுவது போன்ற குணநலன்கள் அவசியம்.

ஆசிரியர் பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்துதான் இன்று அரசு அவர்களை ஊக்குவிக்கும் வகையில் கைநிறைய சம்பளமும், எண்ணிலடங்கா சலுகைகளையும் அளித்து, சிறந்த ஆசிரியர்களுக்கு விருதுகளும் வழங்கி, தகுந்த மரியாதையுடன் நடத்தி வருகின்றது.

காலையில் பள்ளி ஆரம்பிக்கும் முன்பு தெருத்தெருவாக சுற்றி வந்து குழந்தைகளை பள்ளிக்கு அழைத்துச் சென்ற ஆசிரியர்களும், பள்ளிக்கு வராமல் நின்றுவிட்ட மாணவர்களை அழைத்து வந்து கல்வி கற்பித்த ஆசிரியர்களும், மாலை வேளையில் கிராமத்தை சுற்றி வந்து பெற்றோர்களை சந்தித்து குழந்தைகளின் கல்வி மற்றும் ஒழுக்கத்தைப் பற்றி அலசி ஆராய்ந்தும், எழுத்தறிவற்ற மக்களுக்கு பல்வேறு எழுத்து வேலைகளை செய்து கொடுத்தும், அவர்களுக்கு வழிகாட்டியாகவும் வாழ்ந்த ஆசிரியர்களும் இருந்துள்ளனர். குறைவான ஊதியத்தில் குக்கிராமங்களில் பணியாற்றிய ஆசிரியர்களும் இருந்தனர்.

இதுபோன்ற உன்னதமான ஆசிரியர் பணியை மதித்து, அவர்களை ஊக்குவித்ததில் இன்றைய தமிழக முதல்வர் அவர்களுக்கு பெரும்பங்கு உண்டு என்பதை தமிழகத்தில் யாராலும் மறுக்க முடியாது. அவர்களை அரசு ஊழியர்களுக்கு இணையாக மாற்றி, பெருமதிப்பை அளித்த முதல் வருக்கு ஆசிரியர் சமுதாயம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளது.

இவ்வளவு மதிப்புடன் நடத்தப்படும் ஆசிரியர்கள் தங்களின் பொறுப்பினை உணர்ந்து, கடமையை தவறாமல் செய்து, ஆசிரியர் பணியை திறம்படவும், ஆர்வமுடனும் செய்து, வருங்கால தலைமுறையை உருவாக்குவதன் மூலம் இந்த நாட்டின் மதிப்பை மேலும் உயர்த்துவோம் என்று ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் சிறப்பு தினமான ஆசிரியர் தினத்தன்று அனைத்து ஆசிரியர்களும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
முற்றம் ஆசிரியர்

தமிழுக்கு உயர்வு!

தமிழின் உயர்விற்கு பாடுபட்ட அவ்வையாரின் வரலாறு படித்தோம். தமிழின் அருமையினை அறிந்து பெருமகிழ்ச்சி அடைந்தோம். வரலாற்று காலத்திலும் பெண்கள் சாதனைகளை படைத்துள்ளனர் என்பதை அறிந்து வியப்படைந்தோம். முற்றம் இதழ் மகளிர் குறித்த பல்வேறு செய்திகளை அளித்து வருவது எங்களுக்கு மிகவும் உற்சாகமாகவும், ஊக்கமளிப்பதாகவும் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமதி. யுவராணி இளங்கோவன்
செம்பருத்தி மகளிர் சுய உதவிக் குழு,
அன்னதானப்பட்டி, சேலம் மாவட்டம்.

விழிப்புணர்வு!

2010 ஆகஸ்ட் மாத முற்றம் இதழில் பெண்களைத் தாக்கும் நோய்கள் குறித்த கட்டுரையை படித்தோம். பெண்களைத் தாக்கும் நோய்களிலிருந்து காக்கும் வகைகளும், அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வண்ணம் பல்வேறு மருத்துவக் குறிப்புகளும் இடம் பெற்றிருந்ததைக் கண்டோம். இனி நோய்கள் தாக்காது விழிப்புடன் இருப்போம். முற்றத்திற்கு வாழ்த்துகள்.

திருமதி. சித்ரா இராமதாஸ்,
தமிழ்த்தாய் மகளிர் சுய உதவிக் குழு,
ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

www.tamilnaduwomen.org/murtram



பெருமதிப்பிற்குரிய மேலாண்மை இயக்குநர், மகளிர்திட்டம் தமிழ்நாடு,
அவர்களுக்கு,

திண்டுக்கல்லில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சர்வைட் கான்வென்ட் கிளையில், கிளை மேலாளராகப் பணிபுரிந்து கொண்டிருக்கும் திருமதி.M. கீதாராணி எழுதும் கடிதம்.

எங்களது திண்டுக்கல் மகளிர் திட்ட அலுவலர் திருமதி.பிரேமாவைச் சந்திக்கச் சென்றபோது "முற்றம்" இதழைக் கண்டேன். படிப்பதற்காகக் கேட்டேன். கொடுத்தார்கள். படித்தேன், ரசித்தேன், வியந்தேன். ஒரு நல்ல மாத இதழ். ஒவ்வொரு பக்கமும், ஒவ்வொரு செய்தியும் அவசியமானது; அறிவுப்பூர்வமானது; ஆக்கப்பூர்வமானது. படித்தவுடன் உங்களையும் உங்களது குழுவையும் பாராட்ட வேண்டுமெனத் தோன்றியது. இன்னும் அதிக மக்களுக்கு இது போய் சேர வேண்டும். வங்கிகள் மூலமாகவும், குழுக்கள் மூலமாகவும் விற்பனையை அதிகம் செய்து பயனை அனைவரையும் பெற செய்யலாம். இது எனது தாழ்மையான கருத்து. உங்கள் சேவை மேலும் ஓங்க வாழ்த்துக்கள்.

நன்றி.

1.9.10
திண்டுக்கல்

இப்படிக்கு,
மோ. கீதாராணி
M. கீதாராணி.

மகளிர் முன்னேற்றத்திற்கு உதவும் வண்ணம் செய்திகள் பலவற்றை தாங்கி வரும் முற்றத்திற்கு எங்கள் நன்றி.

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், தங்கள் பகுதியில் நடைபெறும் சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவற்றை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். மேலும் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும்.

– ஆசிரியர், முற்றம்

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com ■ wdcmutram@gmail.com

கோவை மாவட்டம்

குங்குமம் மகளிர் சுய உதவிக் குழு

சமூக நலப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். தங்கள் பகுதியின் முன்னேற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, சுகாதார விழிப்புணர்வை மேம்படுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

கோவை மாவட்டம், அசோக் நகர் பகுதியில் குங்குமம் மகளிர் சுய உதவிக் குழு கடந்த 2002ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் மகளிர் திட்டம் மூலமாக அளிக்கப்பட்ட பயிற்சிகளில் ஊக்கத்துடன் கலந்து கொண்டு, பல்வேறு பயிற்சிகளைப் பெற்றுள்ளனர். உறுப்பினர்களின் ஒற்றுமையான செயல்பாட்டின் காரணமாக குங்குமம் மகளிர் குழு வெற்றிப் பாதையில் நடைபோட்டு வருகிறது.

வங்கியில் சேமிப்புக் கணக்குத் துவங்கி, தவறாது சேமித்து வந்தனர். குழுவிற்கு கிடைத்த சுழல் நிதியினைக் கொண்டு தங்களுக்குள் உட்கடன் பெற்றுக் கொண்டனர். பொருளாதாரக் கடனாகப் பெற்றத் தொகையினைக் கொண்டு, மங்கையர் விரும்பும் வண்ணம் வளையல்கள், மோதிரம், கால் கொலுசுகள், காதணிகள், கழுத்தணிகள் மற்றும் பல்வேறு வகையான ஆபரணங்களை ஐம்பொன்னில் உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

மகளிர் திட்டத்தின் மூலம் உள்ளூர், வெளியூர் மற்றும் வெளிமாநிலங்களில் நடைபெறும் பல்வேறு விற்பனைப் பொருட்காட்சிகளிலும் கலந்து கொண்டு தங்களின் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர். புதுடெல்லி, ஹைதராபாத், சென்னை மற்றும் ஊட்டி போன்ற நகரங்களில் நடைபெற்ற பொருட்காட்சிகளில் சிறப்பாக பங்கேற்றமைக்காக பரிசுகள், பாராட்டு கேடயங்கள், சான்றிதழ்கள் போன்றவற்றை ஏராளமாக இக்குழுவினர் பெற்றுள்ளனர். தங்களின் உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொருளாதார ரீதியாக வெற்றி பெற்றுள்ள இக்குழுவினர் சமூக நலப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். தங்கள் பகுதியின் முன்னேற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, சுகாதார விழிப்புணர்வை மேம்படுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். ■

பெரம்பலூர் மாவட்டம்

விளாம்பழம் மகளிர் சுய உதவிக் குழு

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், மலையாளப்பட்டியில் கடந்த 1998 முதல் விளாம்பழம் மகளிர் சுய உதவிக் குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்களுக்கு மகளிர் திட்டம் மூலம் தொழில் முனைவோர் பயிற்சி, ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி போன்றவைகள் அளிக்கப்பட்டது.

'ஆற்றலைக் காட்டிலும் ஆர்வமே வெற்றிக்கு காரணம் என்பது அனுபவத்தின் படிப்பினை' என்ற கூற்றுக்கு இணங்க, இக்குழு உறுப்பினர்கள் பாக்கு மட்டையில் தட்டுகள் தயாரிக்கும் பயிற்சியினை மகளிர் திட்டத்தின் உதவியுடன் பெற்றனர்.

பின்னர் சுழல் நிதியாக பெற்ற 25,000/– ரூபாயும், 2009ஆம் ஆண்டு ரூ. 3,65,000/–த்தை தொழில் கடனாக வங்கியில் பெற்றும், பாக்கு மட்டையில் பல்வேறு அளவுகளில் தட்டுகளை தயாரிக்கும் தொழிலில் ஈடுபடத் துவங்கினர்.

இக்குழுவினர் உற்பத்தி செய்யும் தரமான, விலை குறைந்த, சுற்றுச்சூழலுக்கு ஊறு விளைவிக்காத பாக்கு மட்டைப் பொருட்களை மக்கள் விரும்பி வாங்கத் துவங்கினர். தற்போது நல்ல வருவாய் ஈட்டி வருவதுடன், வங்கியில் பெற்ற கடன் தொகையையும் முறையாகத் திரும்பச் செலுத்தி வருகின்றனர். மகளிர் திட்டத்தின் சார்பில் நடத்தப்படும் பல்வேறு பொருட்காட்சிகளில் அரங்குகள் அமைத்து தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்கின்றனர்.

உறுப்பினர்கள் குழு நிர்வாகத்தை முறையாக நடத்துவதுடன், குடும்ப நிர்வாகத்தையும் செயல்படுத்த உள்கடன் பெற்று தனியாகத் தொழில் செய்து வருவாய் பெற்று வருகின்றனர்.

இக்குழுவின் உறுப்பினர்கள் தங்கள் பகுதியில் வசிக்கும் ஏழைக் குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல், மருத்துவ முகாம்களில் பங்கேற்றல், விழிப்புணர்வு பேரணிகள் நடத்துதல், முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்றோர் மற்றும் கர்ப்பிணிகளுக்கு உதவுதல் போன்ற சமூக நலப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். ■

இக்குழுவினர் தயாரித்த தரமான, விலை குறைந்த, சுற்றுச்சூழலுக்கு ஊறு விளைவிக்காத பாக்கு மட்டைத் தயாரிப்புகளை மக்கள் விரும்பி வாங்கத் துவங்கினர். தற்போது நல்ல வருவாய் ஈட்டி வருவதுடன், வங்கியில் பெற்ற கடன் தொகையையும் முறையாகத் திரும்பச் செலுத்தி வருகின்றனர்.

மகளிர் குழு கூட்டமைப்புகள்..
ஒரு பார்வை...

மகளிர் வாழ்வு சிறந்திட, மங்கள வாழ்வு பெற்றிட, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1989ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் துவக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் இன்று மகத்தான வெற்றியினை பெற்றுள்ளது.

சுய உதவிக் குழுக்கள் தங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கும், குறைகளை வெளிப்படுத்துவதற்குமான ஒரு களமாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அமைகிறது. சுய உதவிக் குழுக்கள் தனியாக சாதிக்க முடியாததை, அவை கூட்டமைப்பில் இணைந்து தங்களுடைய ஆற்றல்களையும், வளங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலமாகவும் சாதிக்கலாம்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய தலைமையில் தீட்டப்பட்ட திட்டங்களும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் ஆக்கமிகு ஆலோசனைகளும், உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் வழிகாட்டுதல்களும், மகளிர் திட்ட செயலாக்க அலகுகளின் அயராத பணியினாலும் அன்று ஆடுதாண்டும் காவிரியாக இருந்த சுய உதவிக் குழு இயக்கம் இன்று அகண்ட காவிரியாக மாறி, மகளிரின் வாழ்வில் மங்கள ஒளியேற்றி வருகிறது என்பது கண்கூடு.

தமிழ்நாடு அரசு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தும் மகளிர் திட்டத்தின் கீழ் கடந்த 20 ஆண்டுகளில் சுமார் 4.69 இலட்சம் மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் பெற்ற வெற்றியின் அடிப்படையில் இவ்வியக்கத்தினை மேலும் வலுப்படுத்தி நிலைத்தத் தன்மையை ஏற்படுத்தும் வகையில் ஊராட்சி, வட்டார மற்றும் மாவட்ட அளவில் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை உருவாக்கிட அரசு உத்திரவிட்டுள்ளது. அதன்படி, மாநிலத்திலுள்ள 12,618 கிராம ஊராட்சிகளிலும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

சுய உதவிக் குழுக்கள் தங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கும், குறைகளை வெளிப்படுத்துவதற்குமான ஒரு களமாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அமைகிறது. சுய உதவிக் குழுக்கள் தனியாக சாதிக்க முடியாததை, அவை கூட்டமைப்பில் இணைந்து தங்களுடைய ஆற்றல்களையும், வளங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலமாகவும் சாதிக்கலாம். பொருட்களை கொள்முதல் செய்வதிலும் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதிலும் கூட்டமைப்புகள் பயனுள்ள வகையில் செயலாற்றலாம். கூட்டமைப்புகள் தங்களது ஊராட்சிகளில் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்து, பயிற்சிகள் வழங்கி, அவற்றை பராமரிக்கும் பணியையும் மேற்கொள்ளலாம். கூட்டமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம் சுய உதவிக் குழுக்கள் வருங்காலங்களில் நிலைத்த தன்மையினை அடைய இயலும்.

2006–07ஆம் ஆண்டு முதல் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினை வலுப்படுத்தும் வகைளில் ஆதார நிதி வழங்குதல், சிறந்த கூட்டமைப்புகளுக்கு மணிமேகலை விருது மற்றும் கூட்டமைப்பு நிருவாகிகளுக்கு பயிற்சியளித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கி – சனநாயக முறையில் அனைவரின் பங்கேற்புடன் செயல்படும் வகையில் திருத்தியமைக்க அரசு உத்திரவிட்டுள்ளது.

இக்கூட்டமைப்புகள் சட்ட ரீதியான அங்கீகாரம் பெறவும், வங்கிகள் மூலம் எளிதாகக் கடன் பெறவும் வழிவகை செய்யும் வகையில் இக்கூட்டமைப்புகளை தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975ன் கீழ் பதிவு செய்ய அரசு உத்திரவிட்டுள்ளது. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975 விதிகள் 25 மற்றும் 42ன் செயல்பாட்டில் இருந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விலக்களித்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த விலக்களிப்பு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வருவாய் ஈட்டும் தொழிலை மேற்கொண்டு அவற்றிலிருந்து பயன்கள் அடையும் வகையில் ஒரு நிறுவன அமைப்பாக உருவாக வழிவகுக்கிறது.

கூட்டமைப்புகளை மறுசீரமைத்தல்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அனைத்துக் குழுக்களின் பிரதி நிதித்துவம் கொண்ட அமைப்பாகவும், ஜனநாயகத் தன்மையுடைய, தற்சார்புடைய, குழுக்களுக்குத் துணைபுரியும் அமைப்பாகவும், அனைவரது பங்கேற்பையும் உறுதி செய்யும் அமைப்பாகவும், நிர்வாகிகளைத் தொடர்ந்து சுழற்சி முறையில் மாற்றுகின்ற அமைப்பாகவும் செயல்படும் வகையில் மறுசீரமைக்கப்பட்டு வருகின்றது.

2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கருத்துருவின் அடிப்படையில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மறுசீரமைக்க அரசு ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி, ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டு, தமிழ்நாடு சங்கப் பதிவுச் சட்டங்களின்படி பதிவு செய்யப்பட்ட அமைப்பாக செயல்பட்டு வருகின்றது. மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் வரும் மூன்று ஆண்டுகளில் தரமாக மறுசீரமைக்க செயல் திட்டம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை வழங்கும் சலுகைகளைப் பெற ஆண்டு வருமான வரம்பு உயர்வு

– மாண்புமிகு முதலமைச்சர்
டாக்டர் **கலைஞர்** அவர்கள்

தமிழக அரசின் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்துறையின் மூலம் இலவச வீட்டுமனைகள், தையல் இயந்திரங்கள், சலவைப் பெட்டிகள் போன்றவற்றை வழங்கும் திட்டங்களின் கீழ் பயனாளிகள் பயன் பெறுவதற்கான ஆண்டு வருமான வரம்பு 12 ஆயிரம் ரூபாய் என்றிருந்ததை, 2000ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் கிராமப்புறங்களில் 16 ஆயிரம் ரூபாய் எனவும், நகர்ப்புறங்களில் 24 ஆயிரம் ரூபாய் எனவும் உயர்த்தி ஆணையிட்டார்கள்.

அதன்படி, பயனாளிகளுக்கு வீட்டு மனைகளும், தையல் இயந்திரங்களும், சலவைப் பெட்டிகளும் அரசால் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ், அதிக எண்ணிக்கையில் பயனாளிகள் பயன் பெறக் கூடிய வகையில், இந்த வருமான உச்ச வரம்பினை மேலும் உயர்த்திட முடிவு செய்து, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை மூலம் தமிழக அரசு இலவசமாக வழங்கிடும் வீட்டு மனைகள், தையல் இயந்திரங்கள், சலவைப் பெட்டிகள் போன்றவற்றை பெறுவதற்கு பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு கிராமப்புறங்களில் தற்போதுள்ள 16 ஆயிரம் ரூபாய் என்பதை 40 ஆயிரம் ரூபாய் எனவும், நகர்ப்புறங்களில் தற்போதுள்ள 24 ஆயிரம் ரூபாய் என்பதை 60 ஆயிரம் ரூபாய் எனவும் உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையின் மூலம் ஏராளமான ஏழை மக்கள் அரசு வழங்கும் நலத்திட்ட உதவிகளைப் பெற்று வாழ்வில் முன்னேற முடியும் என்பது குறிப்பிடத் தக்கது.

ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்களுக்குத் தாமே நேரடியாக சுழல் நிதி வழங்கியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டு 6 மாதங்கள் முடிவுற்ற பின் அவை வெளிப்படையான நிர்வாகம், கடன் ஒழுக்கம் மற்றும் சமூக மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் போன்ற குறியீடுகளின் அடிப்படையில் தர மதிப்பீடு செய்யப்படும்.

தயாரிக்கப்பட்டுள்ளது. இதுவரை மகளிர் திட்டத்தின் கீழ் 1,407 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. 2010–11ஆம் ஆண்டில் மேலும் 3,780 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டு, கூட்டமைப்பு மற்றும் குடியிருப்பு அளவிலான மன்றங்களின் உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மைப் பயிற்சிகள் வழங்குவதன் மூலம் வலுப்படுத்தப்படும். அத்துடன் கூட்டமைப்பு நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு சமூகத் தணிக்கை, தொழில் வாய்ப்புகளைக் கண்டறிதல் போன்ற இனங்களில் கூடுதல் பயிற்சி வழங்கப்படும்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகை

சிறப்பாகச் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஊக்கப்படுத்தும் வகையில், தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக தலா ரூபாய் ஒரு இலட்சம் அளிக்கப்படும் என அரசு அறிவித்து, அதற்காக 2009–10ஆம் ஆண்டில் ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்தது. தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற 1,000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது. 2010–11ஆம் ஆண்டு மேலும் 4,000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் ஊக்கத் தொகையாக வழங்கப்படும். இதற்காக ரூபாய் 40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் முக்கியமான பொறுப்புகளில் ஒன்று நிதியிடையீட்டாளர் பணியாகும். தர மதிப்பீட்டில் தேர்ச்சிப் பெற்ற

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் நிதி இணைப்பு பெறுவதற்கும், வங்கிகள் மூலம் பெருங்கடன் பெற்று உறுப்பினர்களுக்கு கடனாக கொடுப்பதற்கும் தகுதி பெறுகின்றன. சில மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக மறுசீரமைக்கப்பட்ட கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன் வழங்கப்பட்டது.

இந்த கூட்டமைப்புகளிடமிருந்து பெற்ற அனுபவத்தின் மூலம் அதனை சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக வழங்குவதிலும், கொடுத்த கடனை வட்டியோடு திரும்பப் பெற்று அதனை முறையாக தவணை தவறாமல் வங்கிகளுக்கு மீளச் செலுத்துவதிலும் வெற்றிகரமாக செயல்பட முடியும் என தெரிய வந்தது. 2009–10ஆம் ஆண்டில் 102 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ. 27.52 கோடி பெருங்கடன் பல்வேறு வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளது. 2010–11ஆம் ஆண்டில் 45 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பல்வேறு வங்கிகளால் ரூ. 11.53 கோடி பெருங்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மணிமேகலை விருதுகள்

சிறப்பாகச் செயலாற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களையும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் ஊக்குவிக்கும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவிலான மணிமேகலை விருதுகளை 2006–07ஆம் ஆண்டு அரசு அறிவித்துள்ளது. மாநில அளவில் 5 சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், 10 சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவில் ஒரு சிறந்த சுய உதவிக் குழு கூட்டமைப்பு மற்றும் மூன்று சிறந்த சுய உதவிக் குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றிற்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

வட்டார அளவில் சிறப்பாக செயல்படும் ஒரு சுய உதவிக் குழுவிற்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கான விருதுகள் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டன. இவ்விருதுகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மேலும் சிறப்பாக செயல்பட ஊக்குவித்துள்ளன.

05.08.2009இல் அரசு வெளியிட்டுள்ள அரசாணையின்படி மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வழங்கப்படும் மணிமேகலை விருதிற்கான தொகை ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் மூன்று இலட்சமாகவும், மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு வழங்கப்படும் மணிமேகலை விருதிற்கான தொகை ரூபாய் 50,000/–லிருந்து ரூபாய் ஒரு இலட்சமாகவும் உயர்த்தி வழங்கப்படும் என அரசு ஆணையிட்டுள்ளது.

2009–10ஆம் ஆண்டில் 102 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ. 27.52 கோடி பெருங்கடன் பல்வேறு வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளது. 2010–11ஆம் ஆண்டில் 45 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பல்வேறு வங்கிகளால் ரூ. 11.53 கோடி பெருங்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மாநில அளவில் சிறந்த மூன்று வங்கிகளுக்கும், ஐந்து வங்கிக் கிளைகளுக்கும் இவ்விருது வழங்கப்படுகிறது.

அட்டைப்படக் கட்டுரை

ஒரு சிறந்த ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு மற்றும் மூன்று சிறந்த சுய உதவிக் குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றிற்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

தனிக் குழுவால் சாதிக்க முடியாதவற்றை சுய உதவிக் குழுக்கள் அனைத்தும் கூட்டமைப்பாக ஒன்று சேர்ந்து கூட்டாக செயல்பட்டால் சவால்களை சமாளித்து இலட்சியத்தை எளிதில் அடையலாம். கூட்டமைப்புகள் தங்களுக்கு ஏற்படும் தடைகளை தகர்த்து முயற்சியுடன் செயல்பட்டால் வெற்றி பெறலாம்.

கலைப்போட்டிகள்

சுய உதவிக் குழு கூட்டமைப்பின் ஒற்றுமையை வலுப்படுத்தவும், திறமைகளை வெளிக்கொணரவும், வட்டார மற்றும் மாவட்ட அளவில் குழு கூட்டமைப்புகளுக்கிடையே கலைப்போட்டிகள் நடத்தப்படுகின்றன. 2007–08, 2008–09 மற்றும் 2009–2010ஆம் ஆண்டுகளில் கலைப் போட்டிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட போட்டிகளில் சுய உதவிக் குழுக்கள் பெருவாரியாக பங்கேற்று, தங்கள் பேரார்வத்தினை வெளிப்படுத்தினர். 2010–11ஆம் ஆண்டிற்கு கலைப்போட்டிகள் நடத்த ஆயத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நகர்ப்புறங்களில் குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்புகள்

சுய உதவிக் குழு இயக்கத்தின் வளர்ச்சிப் பாதையில் அடுத்த கட்டமாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் உருவாக்கப்பட்டுள்ளன. அதேபோல நகர்ப்புறங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களும் பயன்பெறும் வகையில் 2010–11ஆம் ஆண்டில் நகர்ப்புறங்களில் குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

தனிக் குழுவால் சாதிக்க முடியாதவற்றை சுய உதவிக் குழுக்கள் அனைத்தும் கூட்டமைப்பாக ஒன்று சேர்ந்து கூட்டாக செயல்பட்டால் சவால்களை சமாளித்து இலட்சியத்தை எளிதில் அடையலாம். கூட்டமைப்புகள் தங்களுக்கு ஏற்படும் தடைகளை தகர்த்து முயற்சியுடன் செயல்பட்டால் வெற்றி பெறலாம்.

கூட்டமைப்புகள், குழுக்களில் உள்ள மாற்றுத் திறனாளிகள், மற்றும் நலிவுற்றோருக்கு முன்னுரிமை அளித்து உதவிகள் செய்ய வேண்டும். பலவீனமாக குழுக்களைக் கண்டறிந்து பிரச்சனைகளைத் தீர்த்து, தேவையான பயிற்சிகள் அளித்து, தகுதியான குழுவாக உருவாக்கி, நிதி இணைப்பு பெற்றுத் தர வேண்டும்.

தனி உறுப்பினராகவோ அல்லது தனிக் குழுவாகவோ பெரிய இலட்சியத்தை அடைய முடியாது. எனவே பெரிய இலட்சியத்தை அடைய கூட்டமைப்பு மிகவும் அவசியமாகிறது.

எனவே மகளிர் சுய உதவிக் குழுக்கள் கூட்டமைப்புகளை உருவாக்கி, சிறப்பாக செயல்பட்டு சாதனைகள் பல படைத்திட வாழ்த்துகள்.

சுய உதவிக் குழு கூட்டமைப்புகள்

- முனைவர். ம. மனோகர சிங்
கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் தமிழ்நாட்டில் அடைந்துள்ள வளர்ச்சிதான் எத்தனை மகத்தானது... எண்ணிப் பார்த்தால் மலைப்பாக உள்ளது. 1989ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் ஒரு சிறு விதையாய் விழுந்து, இன்று மாநிலம் முழுவதும் அனைத்துக் கிராமங்களிலும் தன் கிளைகளை பரப்பி 4,56,569 குழுக்களாக வளர்ந்து அடைந்துள்ள வெற்றி தமிழ்நாட்டின் தற்கால வரலாற்றில் ஒரு அத்தியாயம்.

இவ்வியக்கத்தில் இணைந்துள்ள மொத்த மகளிர் 72.04 இலட்சம் பேர். வறுமையில் வாடும் இந்த ஏழை மகளிர் இதுவரை ரூ. 10/-ம், 50/-ம் ஆக சேமித்த தொகை ரூ. 2,618 கோடி. தங்கள் குடும்ப நலம் பேணவும், கந்து வட்டிக்காரர்களின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ளவும், தொழில் தொடங்கி வாழ்க்கையினை மேம்படுத்தவும், இக்குழுக்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள கடன் தொகை ரூ. 9,075.97 கோடி. உலக அளவில் ஒரு சில இயக்கங்களால் மட்டுமே செய்ய முடிந்ததை நாம் சாதித்து காட்டியுள்ளோம்.

இத்தனை பெரிய சாதனைகளை இந்த இயக்கத்தினால் எவ்வாறு செய்ய முடிந்தது? இதற்குக் காரணமானவர்கள் யார்?

அரசின் முன்னுரிமையினைப் பெற்றதனால் கிடைத்த தாராளமான நிதி ஒதுக்கீடு

மாநிலத்தில் உள்ள அனைத்து மகளிரையும் மேம்படுத்த வேண்டும் என்ற முழு அக்கறையோடு அரசு மற்றும் மாநில அளவில் இத்திட்டங்களை திட்டமிட்டு, வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு அமைச்சர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் வல்லுநர்கள்;

மக்களோடு மக்களாக இணைந்து இத்திட்டத்தினை உத்வேகத்தோடு செயல்படுத்திய திட்ட அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் இதர அரசுத்துறை அலுவலர்கள்;

தங்கள் சொந்த குடும்பங்களை விட்டு விட்டு கிராமம் கிராமமாக, வீதி வீதியாக, காடு மேடு என பாராமல் மகளிரை மேம்படுத்த வேண்டும் என்ற சமுதாய அக்கறையோடு வியர்வை சிந்தி பணியாற்றிய ஆயிரக்கணக்கான தொண்டு நிறுவனப் பணியாளர்கள், அவர்களை வழி நடத்திய தொண்டு நிறுவன இயக்குநர்கள் மற்றும் நிறுவனர்கள்;

தொண்டுள்ளம் கொண்ட பயிற்றுநர்கள்;

பல ஆயிரம் கோடி ரூபாயினை சுய உதவி குழுக்களுக்கு கடனாக தந்துதவிய வங்கியாளர்கள்;

வறுமையில் மூழ்கி விடாமல் ஏழை மகளிர் தொழில் செய்து, மேம்பாடு பெற ஊக்குவித்து, தொழில் முயற்சிகள் மேற்கொள்ள உதவிகள் செய்யும் தொழில் நிறுவனங்கள்;

தான் மட்டும் மேம்பாடு அடைந்தால் போதாது என்ற நல் உள்ளம் கொண்டு, சமுதாயத்தில் உள்ள மற்ற மகளிரும் முன்னேற வேண்டும் என்ற அக்கறையோடு எவ்வித ஊதியமுமின்றி, பல இலட்சம் குழுக்களின் பதிவேடுகளை பராமரிப்பதோடு, அனைத்து உறுப்பினர்களையும் அரவணைத்து வழிநடத்தி செல்லும் பல இலட்சம் ஊக்குநர்கள், பிரதிநிதிகள் மற்றும் சமுதாய வழிநடத்துநர்கள்;

இந்த இயக்கம் இத்தகைய நிலைக்கு வர காரணமாகயிருந்தவர்கள் பற்றி மேற் கண்டவாறு சொல்லிக் கொண்டே போகலாம். (தொடரும்)

1989ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் ஒரு சிறு விதையாய் விழுந்து, இன்று மாநிலம் முழுவதும் அனைத்துக் கிராமங்களிலும் தன் கிளைகளை பரப்பி 4,56,569 குழுக்களாக வளர்ந்து அடைந்துள்ள வெற்றி தமிழ்நாட்டின் தற்கால வரலாற்றில் ஒரு அத்தியாயம்.

சுய உதவிக் குழுக்கள் தொடர்

ப. சஞ்சீவ் குமார்

வெற்றியை நோக்கி

ஒரு பயணம்



அன்புள்ள சுய உதவிக் குழு சகோதர, சகோதரிகளே வணக்கம். சென்ற பகுதியில் ஒரு தொழிலை ஆரம்பிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய சிலவற்றை குறித்து அறிந்தோம். அதன் தொடர்ச்சியினை இப்பகுதியில் காணலாம்.

நம்மைச் சுற்றிலும் நிறைய வாய்ப்புகளை கடவுள் கொடுத்துள்ளார். அதை நாம் எவ்வாறு பயன் படுத்துகிறாம் என்பதைப் பொறுத்தே நம் முன்னேற்றம் அமைகிறது.

அன்னபூர்ணா குழும கிளைகள் கோவையில் பெருக ஆரம்பித்தது. திரு. தாமோதர சாமி அவர்கள் புதுப்புது தொழில் நுட்பங்களை புகுத்தி வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தினார். ‘வாடிக்கையாளர்களின் திருப்தியே வாழ்க்கையின் இலட்சியம்’ என்பதில் உறுதியாக இருந்தார். அதன் விளைவு இன்று கோவையில் அன்னபூர்ணா குழும கிளைகள் 10க்கும் மேல் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

அதில் ஒரு கிளையில் நுழைவு வாயிலில் ‘நிறைகளை நண்பர்களிடம் கூறுங்கள்; குறைகளை எங்களிடம் கூறுங்கள்’ என்ற வாசகத்தில் கூட வாடிக்கையாளர்களுக்கு அளிக்கும் முக்கியத்துவம் வெளிப்படுகிறது. மிகவும் உயர்ந்த நிலைக்கு சென்ற பிறகும் கூட அவர் எளிமையாகவே இருந்தார். நிறைய தொழில் முனைவோர்களை உருவாக்கினார். சிரமப்படுவோருக்கு உதவிகள் செய்தார்.

ஒரு தொழில் முனைவோர்க்கு உள்ள அனைத்து குணநலன்களையும் ஒருங்கே பெற்றிருந்தார். இன்று திரு. தாமோதரசாமி அவர்கள் உயிருடன் இல்லை என்றாலும், அவர் வாழ்ந்த வாழ்க்கை புதிதாக தொழில் முனைவோர்க்கு ஒரு சிறந்த பாடமாகும்.

எந்த ஒரு வியாபாரத்திற்கும் நமக்குத் துணையாக இருப்பது புன்னகை. முக மலர்ச்சியுடன் வாடிக்கையாளர்களை கவனித்தால்தான் வியாபாரம் பெருகும்; வளம் பெருகும். சிரிக்கத் தெரிந்தவன் கடை வைக்கக் கூடாது என்பது சீனப் பழமொழி.

BUSINESS என்பது என்ன?

B - Boldness - தன்னம்பிக்கையுடனும், வெளிப்படையாகவும் இருத்தல்

U - Understanding - வாடிக்கையாளர்களின் தேவைகளைப் புரிந்து கொள்ளுதல்

S - Simplicity - எளிமையாக இருத்தல்

I - Informed - புதிய தகவல்களை அறிந்திருப்பது

N - Neutral - நடுநிலையாக இருப்பது

E - Employee - தொழிலாளியாகவும் இருத்தல்

S - Service - சேவை

S - Sustainability - நிலைத்த தன்மை

மேற்கூறிய அனைத்தையும் ஒருங்கே பெற்றிருந்தால்தான் ஒரு தலைசிறந்த தொழில் முனைவோராக நாம் வர முடியும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

வெற்றியாளராக மாறிய மற்றொரு தொழில் முனைவோரை நாம் பார்க்கலாம்

கோவையில் ராஜேஸ்வரி என்ற பெண் தன் தோழியின் திருமணத்திற்கு கணவருடன் சென்றார். அங்கு சென்று பார்த்தபோது திருமண மண்டபமே மிகவும் பரபரப்பாக காணப்பட்டது. காரணம் கேட்டபோது மணவறை கட்டும் நபர் அங்கே வரவில்லை. மணமகன் மற்றும் மணமகள் வீட்டார் மிகவும் தவிப்புடன் காணப்பட்டனர். மாற்று நபரைத் தேடி பல வழிகளிலும் முனைந்தனர். ஆனால் பலனேதும் இல்லை.

உடனே அங்கு இருந்த ராஜேஸ்வரி மணமகள் வீட்டாரிடம் சென்று ‘மலர்களை வாங்கி வாருங்கள், நானே முடிந்த அளவு மணவறை அமைத்து தருகிறேன்’ என்று கூறி, மணவறையை அமைத்தார். மணவறையும் நன்றாக அமைந்தது. திருமணமும் சிறப்பாக நடைபெற்று முடிந்தது. உடனே திருமண வீட்டார் ராஜேஸ்வரியை அழைத்து மணவறை அமைத்ததற்கு ஊதியமாக பணம் கொடுத்தனர்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு ராஜேஸ்வரி மணவறை அமைத்தலையே ஒரு தொழிலாக செய்யலாமே என்று தீர்மானித்து, கணவரின் உதவியுடன் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் இல்லத் திருமணங்களுக்கு மணவறை அமைத்துக் கொடுக்கும் தொழிலை மேற்கொண்டார். சிறப்பாகவும், செலவு குறைவாகவும் மணவறைகளை அமைக்கும் தொழிலை மேற்கொண்ட ராஜேஸ்வரி படிப்படியாக வளர்ச்சி அடைந்தார். இன்று பல்வேறு விதமான மணவறைகளின் படங்களை வைத்து திருமணங்களுக்கு மணவறை அமைத்துக் கொடுக்கும் தொழிலில் முன்னேற்றம் கண்டு வருகிறார். நம்மைச் சுற்றிலும் நிறைய வாய்ப்புகளை கடவுள் கொடுத்துள்ளார். அதை நாம் எவ்வாறு பயன் படுத்துகிறாம் என்பதைப் பொறுத்தே நம் முன்னேற்றம் அமைகிறது. ■

அரசு வேலைவாய்ப்பில் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு 20 விழுக்காடு இட ஒதுக்கீடு தமிழக அரசு அவசரச் சட்டம்

தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசின் நேரடி நியமன வேலை வாய்ப்புகளில் 20 விழுக்காடு ஒதுக்கும் வகையில் தமிழக அரசு அவசரச் சட்டம் பிறப்பித்துள்ளது.

கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் தமிழில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படும் என்று தீர்மானமாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி தமிழில் படித்தவர்களுக்கு வேலை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் தமிழ் வழியில் படிப்பவர்களுக்கு, மாநில அரசின் நேரடி வேலைவாய்ப்பில் 20 விழுக்காடு ஒதுக்கும் வகையில் ஒரு அவசர சட்டத்தை மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் வெளியிட்டார்.

இது சட்டம் குறித்த விபரம் வருமாறு மாநில அரசின் நிர்வாகம் ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக நடைபெறவும், சாதாரண மக்களும் அறிந்து கொள்ள வசதியாக தமிழில் இருக்க வேண்டும் என்பதற்காகவும் இந்தச் சட்டம் இயற்றப்படுகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கும், மற்ற சட்டங்களுக்கும் உட்பட்டு இது உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ் வழியில் படித்தவர்களுக்கு மத்திய அரசு வேலையிலோ, மற்ற மாநில அரசுகளின் வேலையிலோ, தனியார் துறையிலோ மிகக் குறைவான வாய்ப்புகளே உள்ளன. ஆகையால் மாநில அரசுப் பணிகளில் அவர்களுக்கு முன்னுரிமை தேவைப்படுகிறது.

எனவே தமிழக அரசு தமிழில் படிக்கவர்களுக்கு முன்னுரிமை அளிக்க ஆய்வு செய்தது. உண்மையில் தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான பள்ளிகள் மற்றும் கல்லூரி பாடங்கள் தமிழ் வழியிலேயே நடத்தப்படுகின்றன. எனவே மாநில அரசின் கீழ் காலிப் பணியிடங்களை நேரடியாக நிரப்பும் போது அதில் 20 விழுக்காடு தமிழ் வழியில் படித்தவர்களுக்கு ஒதுக்க வேண்டும். இந்த காரணத்திற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வர தமிழக அரசு முடிவு செய்து, தற்போது அவசர சட்டத்திற்கு செயல் வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. ■

சென்னை

இளைஞர்களுக்கு ஆலோசனை

சென்னையில் மகளிர் திட்ட அலகின் செயல்பாடுகளையும், சுய உதவிக் குழுக்கள் மேற்கொண்டு வரும் தொழில் நடவடிக்கைகளையும் மற்றும் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு வரும் தொழிற்பயிற்சிகளையும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் K. கோபால், இ.ஆ.ப., அவர்கள் 25.08.2010 அன்று ஆய்வு செய்தார்.

எழும்பூர் கோ–ஆப்டெக்ஸ் வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழுவால் நடத்தப்படும் சிற்றுண்டி விடுதியை மேலாண்மை இயக்குநர் அவர்கள் பார்வையிட்டார். சிற்றுண்டிச் சாலையின் செயல்பாடுகள், பிரச்சனைகள் போன்றவற்றை கேட்டறிந்து, மேலும் சிறப்பாக செயல்படுவதற்குத் தேவையான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கினார்.

பின்னர் இளைஞர் தொழிற்பயிற்சி திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பயிற்சிகளைப் பார்வையிட்டு, பயிற்சி பெற்று வரும் இளைஞர்களிடம் பயிற்சி குறித்த விபரங்களையும், பயிற்சிக்குப் பின்னர் வேலை வாய்ப்பு குறித்த விபரங்களையும் கேட்டறிந்து ஏற்ற ஆலோசனைகளை வழங்கினார். ■

இளைஞர் தொழிற்பயிற்சி திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பயிற்சிகளைப் பார்வையிட்டு, பயிற்சி பெற்று வரும் இளைஞர்களிடம் பயிற்சி குறித்த விபரங்களையும், பயிற்சிக்குப் பின்னர் வேலை வாய்ப்பு குறித்த விபரங்களையும் கேட்டறிந்து ஏற்ற ஆலோசனைகளை வழங்கினார்

ஈரோடு

புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், இளைஞர் தொழிற்திறன் பயிற்சி, பூமாலை வணிக வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழுவினர் அமைத்துள்ள கடைகள் போன்றவை குறித்து இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

மகளிர் திட்ட செயல்பாடுகள் - ஆய்வு

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் K. கோபால், இ.ஆ.ப., அவர்கள் ஈரோடு மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். சுடலைக்கண்ணன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஈரோடு மகளிர் திட்ட அலுவலர், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகள், குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு வங்கிக் கடன், புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல் போன்றவற்றில் அடைந்துள்ள இலக்குகள் குறித்து ஆய்வு செய்தும், குறிப்பிட்ட காலத்தில் இலக்குகளை அடைய மேற்கொள்ள வேண்டிய செயல் முறைகள் குறித்தும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் ஆலோசனைகளை வழங்கினார். ■

சென்னை

மகளிர் திட்ட அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம்

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல் பட்டு வரும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சென்னையில் உள்ள தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத் தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் K. கோபால், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், 32 மாவட்ட திட்ட அலுவலர்கள் மற்றும் 64 உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆய்வுக் கூட்டத்தில் மகளிர் திட்டத்தின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள், புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், கூட்டமைப்புகளை மறுசீரமைத்தல் மற்றும் பெருங்கடன் பெற்றுத் தருதல், இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பயிற்சிகள் மற்றும் பணி வாய்ப்புகள், சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தல், பூமாலை வணிக வளாகம் போன்ற அனைத்து திட்டங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதுவரை மகளிர் திட்டத்தின் சார்பில் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களில் அடைந்துள்ள இலக்குகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய செயல் திட்டங்கள் போன்றவை குறித்தும், அடைய வேண்டிய இலக்குகள் குறித்த ஆலோசனைகளையும், வழிமுறைகளையும் ஆய்வுக் கூட்டத்தில் மேலாண்மை இயக்குநர் அவர்கள் வழங்கினார்கள். ■

திருநெல்வேலி

கோசாலை கால்நடைகள்

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் கோசாலை கால்நடைகளை சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு இலவசமாக வழங்கிடும் பொருட்டு, தகுதி உள்ள சுய உதவிக் குழுக்களை தேர்ந்தெடுத்திட, திருநெல்வேலி மாவட்ட மகளிர் திட்ட அலுவலர், திருநெல்வேலி கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் மற்றும் திருச்செந்தூர் இந்து அறநிலையத் துறை இணை ஆணையர் ஆகியோர் பரிந்துரையின் பேரில் நேர்காணல் நடைபெற்றது. கால்நடைகளை இலவசமாகப் பெற தேர்ந்தெடுக் கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மகளிர் திட்ட அலுவலர் திருமதி ஜி. முத்துமீனாள் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் இணை ஆணையர் திரு. பாஸ்கரன், திருநெல்வேலி மாவட்ட கால்நடைகள் பராமரிப்புத் துறை அம்பாசமுத்திரம் உதவி இயக்குநர் திரு. கணபதி (கால்நடை மருத்துவர்) திருநெல்வேலி உதவி இயக்குநர் (கால்நடை நோய் புலனாய்வு) திரு. குமரகுருபரன், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர்கள் திரு. தங்கதுரை மற்றும் திருமதி. திலகவதி, மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர் திரு. அருணாச்சலம் ஆகியோர் கலந்து கொண்டனர். ■

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் கோசாலையில் பராமரிக்கப்பட்டு வந்த 34 கறவை மாடுகள், 35 கிடாரி கன்றுகள், 16 காளை கன்றுகள், 16 காளை மாடுகள் என ஆக மொத்தம் 101 கால்நடைகளை 74 நபர்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி 28.08.2010 அன்று பிராஞ்சேரியில் நடைபெற்றது.

மாவட்டச் செய்திகள்

சென்னை

நல்லிணக்க நாள் உறுதிமொழி

மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர் அமரர் இராஜீவ் காந்தி அவர்களின் பிறந்த நாளை ஆண்டுதோறும் நல்லிணக்க நாளாக அரசு அறிவித்துள்ளது.

மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர் அமரர் இராஜீவ் காந்தி அவர்களின் பிறந்த நாளை ஆண்டுதோறும் நல்லிணக்க நாளாக அரசு அறிவித்துள்ளது. அதன் படி தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் 20.08.2010 அன்று நல்லிணக்க நாள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி மேலாண்மை இயக்குநர் டாக்டர். K. கோபால். இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர் மற்றும் அலுவலர்கள், பணியாளர்கள் அனைவரும் இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நல்லிணக்க நாள் உறுதிமொழி ஏற்றனர். ■

நாமக்கல்

இயற்கை உணவு முறை குறித்து மகளிர் குழுக்களுக்கு பயிற்சி

இயற்கை உணவு முறை குறித்து மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, நாமக்கல் உழவன் உணவகத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாநிலம் முழுவதும் உழவர் சந்தைகளில் கம்பு, சோளம், தினை, கேழ்வரகு, கேப்பை உட்பட, பல்வேறு தானியங்களில் இருந்து தயாரிக்கப்படும் உணவுகள் விற்பனை செய்யப்பட உள்ளன. இதற்காக இந்த தானியங்களைப் பக்குவப்படுத்துவது, அரைப்பது, உணவாக தயாரிப்பது போன்ற பயிற்சிகள் நாமக்கல்லில் உள்ள உழவன் உணவகத்தில் வழங்கப்படுகிறது. மாநிலம் முழுவதும் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் வரவழைக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு, உழவர் சந்தைகளில் கடைகள் ஒதுக்கப்பட்டு, இயற்கை உணவுகள் விற்பனை செய்யப்படவுள்ளது. தேனி மாவட்டத்தில் கம்பம் உழவர் சந்தையில் தற்போது இயற்கை உணவு விற்பனை துவங்கி உள்ளது. விரைவில் தேனி உழவர் சந்தையில் துவக்கப்பட உள்ளது. ■

> **நாமக்கல்லில்** உள்ள உழவன் உணவகத்தில் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. மாநிலம் முழுவதும் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் வரவழைக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு, உழவர் சந்தைகளில் கடைகள் ஒதுக்கப்பட்டு, இயற்கை உணவுகள் விற்பனை செய்யப்படவுள்ளது.

திருப்பூர்

மேலாண்மை இயக்குநரின் ஆய்வு

திருப்பூர் மாவட்டத்தில் மகளிர் திட்டத்தின் செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர். K. கோபால், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார். திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆட்சியர் திரு. சமயமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில், இம்மாவட்டத்தில் செயல்பட்டுவரும் குழுக்களின் செயல் பாடுகள், தொழில் நடவடிக்கைகள், பயிற்சிகள், கூட்டமைப்புகளின் செயல்பாடுகள் ஆகியவற்றை மேலாண்மை இயக்குநர் ஆய்வு செய்தார். இளைஞர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள், குழுக்களுக்கு வழங்கப்பட்டு வரும் கடனைக் குழுக்கள் பயன்படுத்தும் விதம், சிறு தொழில்களை நடத்தும் குழுக்கள், தொண்டு நிறுவனங்கள் போன்றவை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் போது நான்கு மாவட்ட மகளிர் திட்ட அலுவலர்கள், ஊரக வளர்ச்சித் துறை உயர் அலுவலர்கள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி

சுழல் நிதி வழங்கும் விழா

தூத்துக்குடி மாவட்டத்தில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, 1005 கிராமப்புற சுய உதவிக் குழுக்களுக்கும், 348 நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி, பல்வகையான தொழில்கள் துவங்குவதற்கு 31 குழுக்களுக்கு பொருளாதாரக் கடன், ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு பெருங்கடன், 5 கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகை, 10 குழுக்களுக்கு நேரடிக் கடன் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார்கள்.

முன்னதாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனை அரங்கினைப் பார்வையிட்டு அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பலவகையான பொருட்கள் குறித்த விபரங்களை கேட்டறிந்தார்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை வழங்க, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. பெ. கீதாஜீவன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் பெருமளவில் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். ■

சென்னை

சென்னை, விருகம்பாக்கம் குடியி ருப்போர் நலச் சங்கத்தின் சார்பில் சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. சிறப்பாக சேவை புரிந்த மருத்துவர்களை கௌரவித்தல், ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா மற்றும் சிறப்பாக செயல்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பரிசுகள் வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் முனைவர். ம. மனோகர சிங் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்.

விருகம்பாக்கம் பகுதியில் செயல்படும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானவர்கள் விழாவில் கலந்து கொண்டனர். ■

கரூர்

சுதந்திர தின விழா

கரூர் மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட்டு வரும் தொண்டமாங்கிணம் ஊராட்சி அளவிலான மகளிர் கூட்டமைப்பின் சார்பில் சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. தொண்டமாங்கிணம் சமுதாயக் களத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு கூட்டமைப்பு செயலாளர் திருமதி. சிவகாமி வரவேற்புரை நிகழ்த்த, கூட்டமைப்பு தலைவி திருமதி. ஜெயலட்சுமி தலைமை வகித்தார்.

கரூர் கிராமியம் தொண்டு நிறுவன இயக்குநர் டாக்டர் நாராயணன் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து சுதந்திர தினத்தின் சிறப்புகள் குறித்து உரை நிகழ்த்தினார்.

மகளிர் திட்ட அலுவலர் திருமதி. எஸ். ராஜலெட்சுமி அவர்கள் தனது உரையில், மகளிர் திட்டத்தின் சிறப்புகள் குறித்தும், கூட்டமைப்பின் அவசியம் குறித்தும் குறிப்பிட்டார். மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் திரு. கணேசன், திரு. லட்சுமிகாந்தன், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. பிரகலநாதன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. தியாகராஜன், தொண்டமாங்கிணம் ஊராட்சி மன்ற தலைவி திருமதி. முருகாயி மருதை, ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் திருமதி. பாக்கியம் தங்கராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சுதந்திர தின விழாவினை சிறப்பித்தனர். ■

திண்டுக்கல்

இணைந்து செயல்பட்டால் சாதிக்கலாம்

திண்டுக்கல் மாவட்ட மகளிர் திட்டத்தின் செயல்பாடுகளை, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் K. கோபால், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்கள். திண்டுக்கல் ஆத்தூர் ஒன்றியம், என்.பஞ்சம்பட்டியில் செயல்பட்டு வரும் மருதம், தாழம்பூ மற்றும் ஸ்ரீ ஜானகி ஆகிய சுய உதவிக் குழுவினர் பொருளாதாரக் கடன் பெற்று திடக்கழிவு மேலாண்மையின் மூலம் பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சியில் பொருட்களாகத் தயார் செய்தல் பயிற்சியை மேலாண்மை இயக்குநர் அவர்கள் தொடங்கி வைத்தும், ரூ. 13 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கூட்டமைப்புக் கூடுதல் கட்டடத்தை பார்வையிட்டார். சானிடரி நாப்கின் உற்பத்தி செய்யும் அன்னபூரணி மகளிர் சுய உதவிக் குழுவின் செயல்பாடுகள், டி.பஞ்சம்பட்டி பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகள், சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம் அதிகாரிப்பட்டி கிராமத்தில் கட்டப்பட்டு வரும் கிராம சந்தை கட்டடம் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

'ஊராட்சி அளவில் மகளிர் கூட்டமைப்புகள் இணைந்து செயல்பட்டால் திட்டப் பணிகள் அனைத்திலும் வெற்றியைப் பெறலாம்' என்றார். இக்கூட்டத்தில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் திரு. மா. வள்ளலார், இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் திரு. க. அருண்மணி, மகளிர் திட்ட அலுவலர் திருமதி. ந. பிரேமா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. அர்ஜுன் முத்தையா மற்றும் பலர் கலந்து கொண்டனர். ■

> **பிளாஸ்டிக்** கழிவுகளை மறுசுழற்சியில் பொருட்களாகத் தயார் செய்தல் பயிற்சியை மேலாண்மை இயக்குநர் அவர்கள் தொடங்கி வைத்தும், ரூ. 13 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கூட்டமைப்புக் கூடுதல் கட்டடத்தை பார்வையிட்டார்.

வேலூர்

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் தயாரிப்பு நிலையம்

18 உறுப்பினர்கள் தங்கள் பங்களிப்பாக ரூ. 10 இலட்சமும், மாடப்பள்ளி கனரா வங்கி வழங்கிய ரூ. 15 இலட்சத்துடன் ரூ. 25 இலட்சத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை தொடங்கியுள்ளனர்.

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர், செலந்தம்பள்ளி காமாட்சி மகளிர் சுய உதவிக் குழு சார்பில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் தயாரிப்பு நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. இக்குழுவைச் சேர்ந்த 18 உறுப்பினர்கள் தங்களின் பங்களிப்பாக ரூபாய் 10 இலட்சமும், மாடப்பள்ளி கனரா வங்கி வழங்கிய ரூ. 15 இலட்சத்துடன் ரூ. 25 இலட்சத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை தொடங்கியுள்ளனர். இந்நிலையத்தில் நாளொன்றுக்கு 15 ஆயிரம் லிட்டர் குடிநீரை சுத்திகரிக்கலாம்.

இங்கு தயாரிக்கப்பட்ட குடிநீர் விற்பனை துவக்க விழாவில் மகளிர் சுய உதவிக் குழுவின் தலைவி திருமதி. பூதேவி மற்றும் செயலாளர் திருமதி. கலைச்செல்வி ஆகியோர் தலைமை வகித்தனர். சார் ஆட்சியாளர் திரு. இரவிச்சந்திரன் முதல் விற்பனையை துவக்கி வைக்க தொழிலதிபர் திரு. மதியழகன் பெற்றுக் கொண்டார்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். பி. மணவாளன், கனரா வங்கி மேலாளர் திரு. வி. புருஷோத்தமன், வட்டாட்சியர் திரு. ஜோதி, ஒன்றியக்குழு உறுப்பினர் திருமதி. மலர்க்கொடி, ஊராட்சி மன்றத் தலைவி திருமதி. கலா உள்ளிட்ட பலர் விழாவில் கலந்து கொண்டனர். ■

தமிழகத்தில் 50 ஆயிரம் புதிய சுய உதவிக் குழுக்கள் துவங்க இலக்கு

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மகளிர் திட்டம் சார்ந்த பணிகளை தமிழ்நாடு மகளிர் நல மேம்பட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் K. கோபால், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார். இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் திரு. ஹரிகரன் இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் மேலாண்மை இயக்குநர் அவர்கள் கூறியதாவது 'தமிழகத்தில் நடப்பு ஆண்டில் 50 ஆயிரம் புதிய சுய உதவிக் குழுக்களை அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆயிரத்து 150 சுய உதவிக் குழுக்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பல்வேறு தொழில் பிரிவுகளில் வேலைவாய்ப்புடன் கூடிய இலவசத் தொழிற்திறன் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

அந்தந்த பயிற்சி நிறுவனங்களின் மூலம் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுத் தரப்படுகிறது. சம்பந்தப்பட்ட அலுவலர்கள், தேசிய வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலை செய்யும் ஏழை எளிய மக்களிடம் சுய உதவிக் குழுக்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி, அவர்களையும் குழுக்களில் சேர்ந்து பயனடை கேட்டுக் கொள்ளலாம், சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்கள் தரமானதாக இருந்தால் கேரளா போன்ற மாநிலங்களில் நடத்தப்படும் பொருட்காட்சி போன்று மாவட்டத்தில் நிறைய பொருட்காட்சிகள் நடத்தப்படும்.மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட குறியீட்டினை விரைந்து முடிக்க அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்த செயல்பட வேண்டும்' இவ்வாறு அவர் கூறினார். முன்னதாக மகளிர் சுய உதவிக் குழுவினரின் கைவினைப் பொருட்கள் கண்காட்சியை பார்வையிட்டார். ■

'தமிழகத்தில் நடப்பு ஆண்டில் 50 ஆயிரம் புதிய சுய உதவிக் குழுக்களை அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆயிரத்து 150 சுய உதவிக் குழுக்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அன்னை கஸ்தூரிபாய் காந்தி

> **அண்ணல்** காந்தியின் வாழ்வு பொதுவாழ்வு; தியாக வாழ்வு; தனக்கென வாழாது நாட்டுக்கென வாழ்ந்த அவரின் கொள்கையை அடியொற்றி, அவரின் வாழ்விலும் துயரிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட நல் ஆத்மா அன்னை கஸ்தூரிபாய் அம்மையார்.

ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னும் இருப்பவர் ஒரு பெண்ணே என்பது ஆன்றோர் வாக்கு. காந்தி என்னும் மகான் உருவாக, அவரின் பின்னே துணை நின்றவர் அன்னை கஸ்தூரிபாய் அம்மையாராவார். அண்ணல் காந்தியின் வாழ்வு பொதுவாழ்வு; தியாக வாழ்வு; தனக்கென வாழாது நாட்டுக்கென வாழ்ந்த அவரின் கொள்கையை அடியொற்றி, அவரின் வாழ்விலும் துயரிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட நல் ஆத்மா அன்னை கஸ்தூரிபாய் அம்மையார்.

அவர் 1869ல் குஜராத்தில் உள்ள போர்ப்பந்தரில் கோகுலதாஸ் முகர்ஜி என்ற வியாபாரியின் மகளாகப் பிறந்தவர்; தன் வயதொத்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியை 1882இல் தம் 13ஆம் வயதில் கைப்பிடித்தவர்.

கஸ்தூரிபாய் எழுதப் படிக்கத் தெரியாதவர், காந்தி அவருக்கு கல்வி கற்பிக்க விரும்பினார். கஸ்தூரிபாய்க்குப் படிப்பில் விருப்பமில்லை. நாட்கள் செல்ல செல்ல குஜராத்தி மொழியை மட்டும் எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டார்; பகவத் கீதையைப் பாராயணம் செய்யவும் அறிந்து கொண்டார்.

கஸ்தூரிபாய்க்கு 1888இல் முதல் குழந்தை பிறந்தது. பின் அவர் மேலும் இரண்டு ஆண் குழந்தைகளுக்குத் தாயானார். 1887இல், காந்தி இங்கிலாந்துக்குப் படிக்கச் சென்றார். அப்பொழுது கஸ்தூரிபாய் தன் மாமியாருடன் இராஜ்கோட்டில் தங்கி இருந்தார். காந்தி பாரிஸ்டர் பட்டம் பெற்றுத் திரும்பியவுடன் பம்பாய் சென்று சிறிது காலம் வழக்கறிஞராகத் தொழில் புரிந்தார். பின்பு இராஜ்கோட்டுக்கே திரும்பி விட்டார்.

இந்தக் காலக்கட்டத்தில், காந்தி மனைவி மீது கோபம் கொண்டு அவரை வீட்டை விட்டு வெளியே அனுப்பி விட்டார். அம்மையாரும் தன் தந்தை வீட்டுக்குச் சென்று சில காலம் இருந்தார். பின் காந்தி அவரை அழைத்து வந்தார். கஸ்தூரிபாய், எல்லா இந்திய மனைவிகளைப் போலவும், தம் கணவனை கடவுளாகவே போற்றி அன்பும் மரியாதையும் செலுத்தி வந்தார்.

காந்தி 1893இல் முதன்முதலாகத் தென்னாப்பிரிக்காவிற்குச் சென்றார். அங்கு தாதா அப்துல்லா என்பவரின் கம்பெனிக்கான வழக்குகளை ஏற்று நடத்தி, அதில் வெற்றி பெற்றார். இதற்கிடையில், நோட்டாலில் இந்தியர்களுக்கு வாக்குரிமை கிடையாது என்று அறிவிக்கப்பட்டது. இதனால் ஏற்படும் சிக்கல்களை அறிந்த காந்தி, இந்தியர்களுக்கு வாக்குரிமைப் பெற்றுத் தரப் போராடி அதில் வெற்றி கண்டார்.

மூன்று ஆண்டுகளுக்குப் பின் இந்தியா திரும்பினார் காந்தி. அப்பொழுது பம்பாயில் பிளேக் நோயால், காந்தியினுடைய சகோதரியின் கணவர் இறந்தார். கஸ்தூரிபாய், அவர்கள் குழந்தையையும் தம் குழந்தையாக ஏற்றுக் கொண்டார். காந்தி திரும்ப தென்னாப்பிரிக்கா செல்லும்போது. மனைவி குழந்தைகளுடன் தனது சகோதரியின் குழந்தையையும் அழைத்துச் சென்றார்.

காந்திக்கு, தென்னாப்பிரிக்க நண்பர்கள் விலை உயர்ந்த பொருட்களையும், ஆடை அணிகலன்களையும் பரிசாகத் தந்தனர். காந்தி அவற்றை ஏற்க விரும்பவில்லை என்றாலும் அன்புடன் தந்ததை மறுக்க இயலாமல் ஏற்றார். அவற்றை ஒரு வங்கியில் அறநிதியாகச் செலுத்தி, தென்னாப்பிரிக்காவில் வாழும் இந்தியர்களுக்கு உதவும்படி ஏற்பாடுகளை செய்தார்.

கஸ்தூரிபாய், எல்லா இந்திய மனைவிகளைப் போலவும், தம் கணவனை கடவுளாகவே போற்றி அன்பும் மரியாதையும் செலுத்தி வந்தார்.

ஆனால் கஸ்தூரிபாய்க்கு, அப்பொருட்களை தாங்களே வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. காந்தி அதைப் பிடிவாதமாக மறுக்கவே, அப்பரிசுப் பொருட்களின் மீது உள்ள ஆசையை விடுத்து கணவரின் எண்ணப்படி எளிமையாக வாழப் பழகிக் கொண்டார். இது கஸ்தூரிபாயிடம் ஏற்பட்ட முதல் மனமாற்றம் எனலாம்.

காந்தி 1904இல் டர்பன் நகருக்கு அருகே போனிக்ஸ் பண்ணை என்ற பெயரில் ஓர் இந்தியக் குடியிருப்பை ஏற்படுத்தினார். அங்கு வீடுகளை ஆசிரமம் போல எளிமையாக அமைத்தார். அங்கு அவரவர்களே அவரவர் வேலையைச் செய்து கொள்வதுடன் ஆசிரம வேலைகளையும் இணைந்து செய்ய வேண்டும். கஸ்தூரிபாயும் அவர் பிள்ளைகளும் ஆசிரம வேலைகள் கடினமாக இருந்தாலும், மிகுந்த ஈடுபாட்டுடன் செய்தனர். (தொடரும்)

மரம்...!

நடமாடும்
மனிதர்களுக்கு
நிழலாக
நின்று விட்டாய்...!

பறந்து வரும்
பறவைகளுக்கு
கிளையாக
அமர்ந்து விட்டாய்...!

உன் அன்பை
கனியாக்கி
எங்களுக்கு
சுவை படைத்தாய்...!

விடும் காற்றை
உள்வாங்கி
வெளிப்பட்டாய்
தென்றலாய்...!

நின்றபடியே
உயர்ந்து விட்டாய்
மற்றவர்களுக்கு
கொடுப்பதில்...!

சுயநலவாதிகள்
மட்டும் – உன்னை
வேரோடு வெட்ட
நினைக்கிறார்களே...!

அவர்களுக்கு தெரியாது
நீதான் அவர்கள்
சுவாசிக்கும்
காற்றின் தாய் என்று...!

–ஆ.பூர்ணசந்திரன் (ஊக்குநர்)
சஞ்சீவி இளைஞர் சுய உதவிக் குழு,
ராஜீவ்காந்தி நகர்,
நெசப்பாக்கம், சென்னை–78.

கண் நோய்களும் தவிர்க்கும் முறைகளும்

நம் உடலில் எத்தனையோ உறுப்புகள் இருக்கின்றன. ஆனால் நாம் இந்த உலகத்தை மிகத் தெளிவா உணர்ந்து கொள்ள, பார்க்க, தெரிந்து கொள்ள நமது இரு விழிகள் தான் முக்கிய காரணமாகின்றன. இன்றைய அவசர உலகில் குழந்தைகளுக்கு 10 வயது தாண்டுவதற்கு முன்பே கண் பார்வைக் கோளாறுகள் ஏற்படுகின்றன. இதற்குக் குழந்தைகளின் பெற்றோரே முதற் காரணம்.

சத்துக் குறைவான உணவு வகைகளை தொடர்ந்து சாப்பிடுவது, கண் கோளாறு ஏற்பட்டு விட்டால் அதை உடனே தக்க மருத்துவரை நாடாமல் அலட்சியம் காட்டுவது, நோயினை முற்றவிட்டு பின்னர் மருத்துவரை நாடுவது என்று பல்வேறு காரணங்களினால் குழந்தை பருவம் முதலே பல்வேறு கண் சம்பந்தமான நோய்கள் ஏற்படுகின்றன.

கண்களை பாதிக்கும் நோய்கள்

கிட்டப் பார்வை, தூரப் பார்வை, பார்வை மந்தம், கண்ணில் சதை வளர்தல், பூ விழுதல், கண்களில் உள்ள மெல்லிய நரம்புகளில் இரத்தம் உறைதல், நீர் வடிதல், மாலைக்கண் வெளிச்சத்தைப் பார்க்க முடியாமை, கண் கோளாறுகள் தொடர்ந்து இருப்பதன் காரணமாக ஏற்படும் தலைவலி, தொற்று நோய்க் கிருமிகள் மூலம் ஏற்படும் கண் நோய், கண் கோளாறு காரணமாக உருவாகும் தூக்கமின்மை, வெள்ளெழுத்து என்னும் கண் பார்வைக் குறைவு என பல்வேறு நோய்களை குறிப்பிடலாம்.

கண்ணில் நோய் ஏற்படக் காரணம்?

சிறு வயது முதலே சத்துக் குறைவான உணவுகளை உண்பது, பார்வை நரம்பில் ஏற்படும் இரத்தக் குறைவு, இரத்த ஓட்டம் தடைபடுதல், இரத்த அழுத்தம், இரத்த ஓட்டம் குறைவு போன்றவற்றினாலும், கல்லீரல் பாதிக்கப்பட்டாலும் கண்ணில் கோளாறுகள் ஏற்படலாம். பரம்பரை காரணமாகவும், தொற்று நோய்க் கிருமிகள், காற்றில் வருகின்ற கிருமிகள், தூசி, தீ போன்றவற்றாலும் கண்கள் பாதிக்கப்படலாம்.

காண்டாக்ட் லென்ஸ் பயன்படுத்துபவர்கள் மருத்துவர்களின் ஆலோசனைப்படி லென்சை பயன்படுத்த வேண்டும். லென்ஸ்களை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். கண் சிவப்படைதல், நீர் வழிதல் போன்ற பிரச்சனைகள் ஏற்பட்டால் லென்சுகளை உடனடியாக எடுத்து விட வேண்டும்.

கண்களை பாதுகாக்கும் உணவுகள்

வைட்டமின் ஏ சத்து குறைவின் காரணமாகவும், இரத்த சோகை, நரம்பு பலவீனம் போன்றவற்றாலும் ஏற்படும் கண் கோளாறுகளுக்கு கேரட், பீட்ரூட், வெண் பூசணி, முள்ளங்கி, வெண்டைக்காய், நாட்டுத் தக்காளி, பசும்பால், பசு மோர், தேன், கொத்தமல்லி, முளை கட்டிய தானிய வகைகள் போன்றவற்றை தினசரி உணவில் அதிகமாக சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கரிசாலங்கண்ணிக் கீரை, பொன்னாங்கன்னி கீரை, பசலைக் கீரை, முருங்கைக் கீரை போன்றவற்றில் ஏதாவது ஒன்றை தினசரி சாப்பிடலாம். பப்பாளி, மாம்பழம், அன்னாசி, மாதுளை, ஆப்பிள், பேரீச்சம் பழம், நெல்லிக்காய் போன்றவைகளை சாப்பிடுவதும், மீன் எண்ணெய் சாப்பிடுவதும் கண் கோளாறுகள் நீங்க உதவும்.

கல்லீரல் நோய் வராமல் பாதுகாக்க வேண்டும். அதற்காக கரிசலாங்கண்ணி கீரையை தினமும் சாப்பிட வேண்டும். தினமும் திராட்சை சாப்பிடுவதும் நல்லது.

பொதுவாக கல்லீரலுக்கும் கண்ணுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எனவே கல்லீரல் நோய் வராமல் பாதுகாக்க வேண்டும். அதற்காக கரிசலாங்கண்ணி கீரையை தினமும் சாப்பிட வேண்டும். தினமும் திராட்சை சாப்பிடுவதும் நல்லது. கொழுப்பு உணவுகள், மசாலா உணவுகள், மாமிச உணவுகள் போன்றவற்றை கூடிய வரை தவிர்ப்பது நல்லது.

மழைக்காலத்தில் ஏற்படும் கண் நோய்

தற்போது ஏற்பட்டுள்ள தட்பவெப்ப நிலை மாற்றத்தினால் ஏற்படும் பல்வேறு நோய்களில் கண் நோயும் முக்கியமானதாகும். அதில் குறிப்பிடத் தக்கது 'மெட்ராஸ் ஐ' எனப்படும் கண் வலி நோயாகும்.

1918ஆம் ஆண்டு சென்னையில் கண் எரிச்சல், வலியுடன் புதுவிதமான கண் நோய் பரவியது. இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களை எழும்பூரில் உள்ள கண் மருத்துவமனையில் பரிசோதனை செய்தபோது 'அடினோ' என்ற வைரஸ் கிருமிதான் காரணம் என்று கண்டறியப்பட்டது. கண்களை பாதிக்கும் வைரஸ் கிருமி சென்னையில் முதலில் கண்டுபிடிக்கப்பட்டதால் இதற்கு 'மெட்ராஸ் ஐ' என்று பெயரிடப்பட்டது.

இந்த நோய் தொற்றினால் கண்களில் உள்ள கருவிழியைச் சுற்றியுள்ள வெள்ளைப்படலத்தின் மீது கண்ணுக்குத் தெரியாமல் வைரஸ் கிருமிகள் தொற்றிக் கொள்ளும். கண்கள் அதிகம் சிவப்பாக இருக்கும். அதிகமாக அழுக்கு சேர்ந்து கண் எரிச்சல் உண்டாகும், தண்ணீர் சொட்டும், கண்கள் கூசும். இது எளிதில் தொற்றும் நோய் என்பதால் இந்நோய் தொற்று ஏற்பட்டவுடன் கண் மருத்துவரின் ஆலோசனையின்படி சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

தக்க சிகிச்சை மேற்கொண்டால் ஒரு வாரத்தில் குணமாகும் நோய் இதுவாகும்.■

பழம், காய்கறிகள் சாப்பிட்டால் நுரையீரல் புற்றுநோய் குறையும்

பல்வேறு வகையான பழங்கள் மற்றும் காய்கறிகளை தினமும் சாப்பிடுபவர்களுக்கு நுரையீரல் புற்றுநோய் வருவதற்கான ஆபத்து குறைவு என ஒரு ஆய்வு கூறுகிறது.

குறிப்பாக புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் அவசியம் பழம் சாப்பிட வேண்டும் என்கிறது அந்த ஆய்வு.

நெதர்லாந்தின் தேசிய பொது சுகாதார மற்றும் சுற்றுச்சூழல் நிறுவனத்தின் புற்றுநோய் இயல் திட்டக் குழுவின் சார்பில் புற்றுநோயைத் தடுப்பது குறித்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

4.26 இலட்சம் பேரிடம் புகைப் பழக்கம், பழம், காய்கறிகள் சாப்பிடும் பழக்கம் உட்பட பல்வேறு தகவல்கள் சேகரிக்கப்பட்டது. இதில் 1,613 பேர் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது.

ஆரோக்கியமாக இருந்தவர்களுக்கு நடத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனையில், பல்வேறு வகையான பழங்கள் மற்றும் காற்கறிகளை தினமும் சாப்பிடாதவர்களை விட சாப்பிட்டவர்களுக்கு நுரையீரல் புற்றுநோய் வருவதற்கான ஆபத்து குறைவாக இருந்தது.

மேலும் புகைப்பழக்கம் உள்ளவர்களில் பழம், காற்கறிகளை சாப்பிட்டவர்களை விட சாப்பிடாதவர்களுக்கு புற்றுநோய் பாதிப்பு அதிக அளவில் இருந்தது. அதாவது புற்றுநோய் செல்கள் வேகமாக பரவுவது தடுக்கப்படுகிறது.

பொதுவாக 14 வகையான பழங்கள் மற்றும் 26 வகையான காற்கறிகளை பெரும்பாலானவர்கள் சாப்பிட்டுள்ளனர். 'பழங்கள் மற்றும் காய்கறிகளில் பல்வேறு வகையான நோய்க்கிருமிகள் எதிர்க்கும் ஆற்றல் இருக்கிறது. இதனால் புற்றுநோய் பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைகிறது.

ஏற்கனவே நோயால் பாதிக்கப்பட்டிருந்தாலும் புற்றுநோய் செல்கள் வேகமாக பரவாது. குறிப்பாக புகைப்பழக்கம் உள்ளவர்கள் பழம், காய்கறிகளை அதிகம் உண்ண வேண்டும்.

அதேசமயம் புகைப்பழக்கத்தை முற்றிலும் கைவிடாவிட்டால் தப்ப முடியாது' என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே தினசரி பழங்கள், காய்கறிகள் போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொண்டு, புற்றுநோயின் தாக்குதலில் இருந்து தப்பித்து ஆரோக்கியத்துடன் நல வாழ்வு வாழ விழிப்புடன் இருப்போம்.■

வளர்க வணிகம்

மொத்தமாய் உழைத்து
மெத்தவே உயர்வோம்

- மாண்புமிகு. துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின்

■ **மரச்சிற்பங்கள்**
சிற்பி ஆண்கள் சுய உதவிக் குழு,
பெரம்பலூர் மாவட்டம்.
செல்பேசி: 94435 91523
விலை: ரூ. 250/- முதல்

■ **அலங்கார தோரணங்கள்**
மல்லிகை அரசு மகளிர் மன்றம்,
திருவள்ளூர் மாவட்டம்.
செல்பேசி:97867 33184

■ **அழகிய பொம்மைகள்**
அறிவொளி துளசி மகளிர் சுய
உதவிக் குழு,
தூத்துக்குடி மாவட்டம்.
செல்பேசி: 94420 53646

■ **பித்தளைப் பொருட்கள்**
தென்றல் சுய உதவிக் குழு,
கோவை மாவட்டம்.
செல்பேசி: 98422 75817

■ **காகிதக் கூழ் பொம்மைகள்**
நவசப்த கன்னி சுய உதவிக் குழு,
மதுரைமாவட்டம்.
செல்பேசி: 93624 16104

■ **அலங்காரத் தட்டுகள்**
ஸ்ரீ மகளிர் சுய உதவிக்
குழு,
தஞ்சாவூர் மாவட்டம்.
செல்பேசி: 93626 90033

SARAS பொருட்காட்சியில்

தமிழக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பாராட்டுக் கேடயம்

ஒவ்வொரு ஆண்டும் வேறு வேறு மாநிலத்தில் இப்பொருட்காட்சி நடைபெற்று வருகிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் தாங்கள் பெற்ற பல்வேறு பயிற்சிகளின் காரணமாக சுய தொழில்கள் பலவற்றை மேற்கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்து வருவாய் ஈட்டி வருகின்றனர்.

இவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வசதிகளை ஏற்படுத்துவதன் வாயிலாக, விற்பனையை அதிகரிக்கவும், மேம்பாடு அடையவும் வழி செய்யும் நோக்கத்துடனும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் வட்டாரம், மாவட்டம், மாநிலம் மற்றும் தேசிய அளவில் பல்வேறு இடங்களில் விற்பனைப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்திட ஏதுவாக அகில இந்திய அளவில் ஆண்டுதோறும் SARAS விற்பனை பொருட்காட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் வேறு வேறு மாநிலத்தில் இப்பொருட்காட்சி நடைபெற்று வருகிறது.

இவ்வாண்டு கேரள மாநிலம், எர்ணாகுளம், எர்ணாகுளத்தப்பன் திடலில் 13.08.2010 முதல் 22.08.2010 வரை நடைபெற்ற SARAS விற்பனை பொருட்காட்சியில் தமிழகத்தில் 16 மாவட்டங்களிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு, தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தன. ஏராளமானவர்கள் நமது சுய உதவிக் குழுக்களின் அரங்குகளைப் பார்வையிட்டு தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிச் சென்றனர்.

பல்வேறு மாநிலத்திலுள்ள சுய உதவிக் குழுக்கள் பங்கு பெற்ற விற்பனைப் பொருட்காட்சியில், தமிழக சுய உதவிக் குழுக்களைப் பாராட்டி கேரள அரசு சார்பில் பாராட்டுக் கேடயம் வழங்கப்பட்டது. மேலும் இப்பொருட்காட்சியில் கலந்து கொண்ட தமிழக சுய உதவிக் குழுக்கள் ரூ. 15 இலட்சத்திற்கு தங்கள் பொருட்களை விற்பனை செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ■

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம்

வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு, அவர்களின் பெற்றோர்களுக்கு நிதியுதவி வழங்குதலும், அப்பெண்களின் கல்வி நிலையை உயர்த்தும் நோக்கத்துடன் 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்' என்ற பெயரில் நிதியுதவி வழங்கப்படுகிறது.

வழங்கப்படும் நிதியுதவி

ரூபாய் 25,000/- (காசோலை / கேட்பு வரைவோலை)யாக திருமணத்திற்கு முன் வழங்கப்படும்.

தகுதி

மணமகளுக்கு 18 வயது நிரம்பியிருக்க வேண்டும்.
மணமகள் 10ஆம் வகுப்பு படித்திருக்க வேண்டும்.
பழங்குடியினராக இருந்தால் 5ஆம் வகுப்பு படித்திருத்தல் வேண்டும்.
மணப்பெண்ணின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ. 24,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணுக்கு மட்டும் உதவித் தொகை வழங்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு

திருமணத்திற்கு 45 நாட்களுக்கு முன் / திருமணத்திற்கு முதல் நாள் வரை விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை பரிசீலிக்க உத்தேசிக்கப்பட்ட கால அளவு

விண்ணப்பங்கள் பெறப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்கள்

அணுக வேண்டிய அலுவலர்

1) மாநகராட்சி ஆணையர் (மாநகராட்சிப் பகுதிகளில்)
2) நகராட்சி ஆணையர் (நகராட்சி பகுதிகளில்)
3) ஊராட்சி ஒன்றிய ஆணையர் (ஊரகப் பகுதிகளில்)
4) மாவட்ட சமூக நல அலுவலர்
5) சமூக நல விரிவாக்க அலுவலர்
6) மகளிர் ஊர்நல அலுவலர்

குறைபாடுகள் இருப்பின் அணுக வேண்டிய அலுவலர்

மாவட்டங்களில் – மாவட்ட ஆட்சியர் / மாவட்ட சமூக நல அலுவலர்
மாநில அளவில் – சமூக நல ஆணையர், சென்னை – 5.
தொலைபேசி எண் 044-28545728

வாழ்ந்து காட்டுவோம்

மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் 29

உடனடி வேலைவாய்ப்புடன் கூடிய செவிலியர் பயிற்சி 31

நாணய தொலைபேசி... காலணி கடை... அடுத்து...? 32

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

பருத்தி விதை கூட்டமைப்பு

சேலம் மாவட்ட

பருத்தி விதை கூட்டமைப்பு

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் அமுதசுரபி நிதி கடன் மற்றும் வங்கிக் கடன் ஒரு இலட்சம் பெற்று கடந்த இரண்டு ஆண்டுகளாக பருத்திக் கூட்டமைப்பை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகின்றனர்.

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் ஓலப்பாடி, ஒட்டப்பட்டி, எ.கரடிப்பட்டி மற்றும் இடையப்பட்டி ஆகிய வறுமை ஒழிப்புச் சங்கங்களை சார்ந்த 48 உறுப்பினர்கள் ஒன்றிணைந்து ஜெயம் மகளிர் பருத்தி விதைக் கூட்டமைப்பை உருவாக்கி சிறப்பாக செயல்படுத்தி வருகின்றனர்.

நிலமற்ற கூலி விவசாயிகளான இவர்கள் ஐந்து ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து ஆத்தூர் ராசி சீட்ஸ் நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசனையைப் பெற்று, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் அமுதசுரபி நிதி கடன் மற்றும் வங்கிக் கடன் ஒரு இலட்சம் பெற்று கடந்த இரண்டு ஆண்டுகளாக பருத்திக் கூட்டமைப்பை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகின்றனர்.

இப்பருத்திக் கூட்டமைப்பின் மூலம் ஒவ்வொருவரும் மாதம் ரூபாய் நான்காயிரம் வரை வருவாய் பெற்று வருகின்றனர். வறுமையை ஒழித்து வாழ்வில் வளம் சேர்த்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத் திற்கும் தங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர். ■

மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள்

சேலம் மாவட்டம் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மற்றும் ஆர்.பி. அறக்கட்டளை இணைந்து மாற்று திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கும் விழா சமீபத்தில் சேலம் தொங்கும் பூங்கா அரங்கில் நடைபெற்றது. மாண்புமிகு தமிழக வேளாண்துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மும்னூணே திட்டத்தின் மூலம் மாற்றுத் திறனாளிகள் 138 பேருக்கு ரூ. 6 இலட்சம் மதிப்பிலான மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, காதொலி கருவி, ஊன்றுகோல், மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வண்டி போன்ற உபகரணங்கள் மற்றும் உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டது. இவ்விழாவில் கலந்து கொண்ட மாற்றுத் திறனாளிகள் அனைவரும் தங்களின் மனமார்ந்த நன்றியினை கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கும் தெரிவித்துக் கொண்டனர். ■

மாற்றுத் திறனாளிகள் 138 பேருக்கு ரூ. 6 இலட்சம் மதிப்பிலான மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, காதொலி கருவி, ஊன்றுகோல், மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வண்டி போன்ற உபகரணங்கள் மற்றும் உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டது.

கோழி வளர்ப்பில் இளைஞர் குழு

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம், தாண்டானூர் கிராமத்தை சேர்ந்த நேரு இளைஞர் குழு உறுப்பினர்கள் 6 பேர் ஒன்றிணைந்து கோழி பண்ணை தொழில் செய்ய உத்தேசித்து தாண்டனூர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் உதவியை நாடினர். கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் தீர்மானம் நிறைவேற்றி ரூபாய் 40,000/– தொழில் கடனாக வழங்கி உதவி செய்தனர்.

மேலும் சுழல் நிதி ரூ. 60,000/– சொந்த பங்களிப்பு ரூ. 20,000/–ம் சேர்த்து ரூ. 1,20,000/– மதிப்பீட்டில் சாந்தி பவுல்டரி பார்ம்–ல் ஒப்பந்தம் போட்டு, கறி கோழி வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டுள்ளனர். கறி கோழி வளர்ப்பு தொழில் மூலம் இத்தொழில் குழுவினர் மாதந்தோறும் தலா ரூபாய் 5,000/– வரை வருமானம் பெறுகின்றனர்.

தினக்கூலிகளாக வறுமையில் வாடிய தங்களுக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஒரு வரப்பிரசாத மாக வந்தது என மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றனர் இக்குழுவின் உறுப்பினர்கள். ■

ஊராட்சித் தலைவர்களை ஊக்கப்படுத்துதல்

அயோத்தியாப்பட்டணம், பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியங்களைச் சேர்ந்த 34 கிராம ஊராட்சிகளுக்கும், 15 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கும் ஊக்க நிதி வழங்கும் விழா சேலம் மாவட்ட ஆட்சியர் திரு. ஜே. சந்திரகுமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் சமீபத்தில் நடைபெற்றது.

ஊக்க நிதியைக் கொண்டு கிராம ஊராட்சிகளில் மக்களுக்கு பயனுள்ள வகையிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

சேலம் மாவட்டத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களை சிறப்பாக நடைமுறைப்படுத்திய அயோத்தி யாப்பட்டணம், பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியங்களைச் சேர்ந்த 34 கிராம ஊராட்சிகளுக்கும், 15 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கும் ஊக்க நிதி வழங்கும் விழா சேலம் மாவட்ட ஆட்சியர் திரு. ஜே. சந்திரகுமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் சமீபத்தில் நடைபெற்றது.

விழாவில் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திய கிராம ஊராட்சிகளுக்கும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கும் ரூபாய் 67 இலட்சம் ஊக்க நிதியாக வழங்கப்பட்டது. விழாவில் மகளிர் திட்ட அலுவலர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்ட மாவட்ட திட்ட மேலாளர் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பாக செயல்பட்ட ஊராட்சிகளுக்கு வாழ்த்துகளையும், நன்றியினையும் தெரிவித்துக் கொண்டனர்.

இந்த ஊக்க நிதியைக் கொண்டு கிராம ஊராட்சிகளில் மக்களுக்கு பயனுள்ள வகையிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது. ■

உடனடி வேலைவாய்ப்புடன் கூடிய செவிலியர் பயிற்சி

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம், பாப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் வசிக்கும் பழங்குடியினத்தைச் சேர்ந்த பெரியசாமி – கமலா தம்பதியினரின் மகள் சசிகலா. மிகவும் வறுமை யான குடும்பத்தைச் சேர்ந்த சசிகலாவால் பத்தாம் வகுப்பிற்கு மேல் படிக்க வசதி இல்லாமல் வாழ்ந்து கொண்டிருந்தார்.

பழங்குடியினர் குடும்பத்திலிருந்து மருத்துவ பணிக்கு செல்வதால் அப்பகுதியினைச் சார்ந்தவர்கள் சசிகலாவினை பெருமையுடன் பார்க்கின்றனர். வாழ்ந்து காட்டுவோம் திட்டம் நலிவிவுற்ற பிரிவினருக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கும் திட்டம் என்பது இதன் மூலம் நிரூபண மாகியுள்ளது.

அப்போது வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வழிகாட்டுதலோடு பாப்பநாயக்கன்பட்டி பழங்குடியினர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத் தின் உதவியுடன் உதவி செவிலியர் பயிற்சியினை ஆத்தூர் ஆர். கே. பாரா மெடிக்கல் மையத்தில் முடித்தார். சசிகலாவின் மருத்துவ பணித்திறனைக் கண்டு வியப்புற்ற அக்கல்லூரி நிர்வாகம் அவருக்கு சேலத்தில் தனியார் மருத்துமனையில் உதவி செவிலியர் பணியினைப் பெற்றுத் தந்தது. இதன் மூலம் அவருக்கு மாத ஊதியமாக ரூ. 3 ஆயிரம் கிடைத்து வருகிறது. தற்போது சசிகலாவின் குடும்பம் மட்டற்ற மகிழ்ச்சியில் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

பழங்குடியினர் குடும்பத்திலிருந்து மருத்துவ பணிக்கு செல்வதால் அப்பகுதியினைச் சார்ந்தவர்கள் சசிகலாவினை பெருமையுடன் பார்க்கின்றனர். வாழ்ந்து காட்டுவோம் திட்டம் நலிவிவுற்ற பிரிவினருக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கும் திட்டம் என்பது இதன் மூலம் நிரூபண மாகியுள்ளது. ■

பழங்குடியினர் குடும்பத்திலிருந்து மருத்துவ பணிக்கு செல்வதால் அப்பகுதி யினைச் சார்ந்தவர்கள் சசிகலாவினை பெருமையுடன் பார்க்கின்றனர்.

கொத்தனார் பயிற்சி வாழ்க்கையில் திருப்புமுனை

கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் அனைத்து குடிசை வீடுகளையும் கான்கிரீட் வீடுகளாக மாற்றும் நடவடிக்கையில் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருவது நாம் எல்லோரும் அறிந்த ஒன்று.

இத்திட்டத்தினால் நேரடியாக பல இலட்சம் குடும்பங்கள் நிரந்தர சொந்த வீடு பெறப் போவது ஒருபுறம் என்றால், இத்திட்டத்தின் கீழ் பல்வேறு பிரிவினரும் வேலைவாய்ப்பு பெற உள்ளனர்.

குறிப்பாக கட்டுமானத் தொழிலுக்காக கொத்தனார்கள் அதிக அளவில் தேவைப்படுவதை கருத்தில் கொண்டு, வாழ்ந்த காட்டுவோம் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சியிலும் குறைந்தது 3 முதல் 4 வரையிலான கொத்தனார்களை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் செயல்படும் முன்னணி தொழிற்பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து அந்தந்த பகுதிகளிலேயே இப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

சுமார் 300 நபர்களுக்கு அளிக்கப்பட உள்ள இப்பயிற்சியில் தலா 30 நபர்கள் வீதம் பிரபல தொழிற்பயிற்சி நிறுவனங்களான சோனா பொறியியல் கல்லூரி, அம்மன் ஐ.டி.ஐ., வெங்கடேஸ்வரா ஐ.டி.ஐ. ஆகிய மையங்களில் 45 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

18 முதல் 35 வயது வரை உள்ள இளைஞர் களுக்கு அளிக்கப்படும் இப்பயிற்சியின் போது தினசரி ரூபாய் 100/– மதிப்பூதியமாகவும், பயிற்சி முடிவின் போது ரூ. 600/– மதிப்புள்ள கட்டுமான தொழிலுக்கான உபகரணங்களும் அளிக்கப்படுகிறது.

பயிற்சிக்குப்பின் சான்றிதழ் மற்றும் பல்வேறு இடங்களில் நடைபெறும் கட்டுமானப் பணிகளில் வேலை வாய்ப்பும் பெற்றுத் தரப்படுகிறது.

பயிற்சி முடித்தவர்கள் தினசரி ரூ. 300/– முதல் ரூ. 400/– வரை நல்ல ஊதியம் பெறுவதுடன் நிரந்தர வேலைவாய்ப்பும் பெற்றுள்ளனர். ■

சேலம் மாவட்டச் சிறப்பு

நாணய தொலைபேசி... காலணி கடை... அடுத்து...?

சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டிணம் ஒன்றியம், காரிப்பட்டி கிராமத்தில் வசிப்பவர் சுந்தர்ராஜ். இவர் தனது முதல் வயதிலேயே போலியோவால் பாதிக்கப்பட்டு இருகால்களும் செயல் இழந்த நிலையில் வெளியில் செல்ல முடியாமல் கடினமான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தார். இந்நிலையில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட காரிப்பட்டி கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் காந்தி ஊனமுற்றோர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராகச் சேர்ந்தார்.

"நம்மால் வாழ முடியுமா? என்று எண்ணியிருந்த என்னைப் போன்றவர்களுக்கு வாழ்வில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஒளி விளக்கை ஏற்றியுள்ளது.

வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் தனிநபர் கடன்பெற்று, ஒரு ரூபாய் நாணய தொலைபேசி கடையை வைத்தார். இவர் நாணயத்துடன் கடன் தொகையை தவறாமல் செலுத்தியதால் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் மீண்டும் இவருக்கு ரூ. 15,000/– கடன் கிடைத்தது. இதன் மூலம் இவர் கடையினை விரிவுபடுத்தி காலணிக் கடை வைத்துள்ளார். இதன் மூலம் மதம் ரூபாய் 3,000/–க்கும் மேல் வருமானம் பெற்று மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறார்.

"நம்மால் வாழ முடியுமா? என்று எண்ணியிருந்த என்னைப் போன்றவர்களுக்கு வாழ்வில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஒளி விளக்கை ஏற்றியுள்ளது. என்னாலும் சமூகத்தில் தலை நிமிர்ந்து வாழ முடியும்" என்று பெருமை கொள்கிறார். ■

மகளிர் கேட்டரிங் மையம்

சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டணம் ஒன்றியத்தில் உள்ள காரிப்பட்டியில் ஏழைப் பெண்கள் ஐந்து பேர் ஒன்றிணைந்து வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் சமையல் கலை பயிற்சி பெற்று, கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் ரூ. 61,000/–மும், சொந்த பங்களிப்பாக ரூ. 10,000/–மும் சேர்த்து ரூ. 71,000/–ல் முல்லை கேட்டரிங் சர்வீஸஸ் என்னும் உணவகத்தை ஆரம்பித்து சிறப்பாக செயல்படுத்தி வருகின்றனர். இதன் மூலம் ஆர்டரின் பெயரில் திருமணம் மற்றும் சுப நிகழ்ச்சிகளுக்கு உணவினை தயாரித்து வழங்குகின்றனர்.

ஏழை விவசாய கூலிகளாக வறுமையில் வாடிய இவர்கள் இத்தொழில் மூலம் மாதந்தோறும் ரூ. 25,000/– வரை நிரந்தர வருவாய் பெற்று வருகின்றனர். கேட்டரிங் தொழிலால் 5 பேர் குடும்பங்களின் வீடுகளில் "நிரந்தரமாக அடுப்பு எரிகிறது" என்றால் மிகையாகாது. ■

Published by S. CHINNAPPAN, on behalf of Mutram Society from Tamilnadu Corporation for Development of Women Ltd., 100, Anna Salai, Guindy, Chennai - 600 032. (60,700 copies circulated) an printed by C. JABAMANI. CANAAN PRESS PRIVATE LTD., 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor : S. CHINNAPPAN.

“சிறப்பாகச் செயலாற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஊக்குவிக்கும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவிலான மணிமேகலை விருதுகளை 2006–07ஆம் ஆண்டு முதல் அரசு தோற்றுவித்துள்ளது.”

டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்.

சுய உதவிக் குழுக்கள் தனியாக சாதிக்க முடியாததை அவை கூட்டமைப்பில் இணைந்து தங்களுடைய ஆற்றல்களையும் வளங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலமாக சாதிக்கலாம். 2002ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணையின் அடிப்படையில் மாநிலத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இந்த கூட்டமைப்புகள் செயலிழந்த நிலையில் காணப்பட்டதால் 2008ஆம் ஆண்டில் அவற்றை அனைத்து தரப்பு மக்களையும் உள்ளடக்கி அனைவரின் பங்கேற்புடன் செயல்படும் வகையில் திருத்தியமைக்க அரசு உத்தரவிட்டது. கடந்த நான்காண்டுகளில் மகளிர் திட்டத்தின் சார்பில் 2,653 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

வங்கிக் கடன் பெற ஏதுவாக மறுசீரமைக்கப்பட்ட அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975ன் கீழ் ‘சங்கங்களாக’ பதிவு செய்திட அரசு ஆணையிட்டது.

சிறப்பாக செயல்படும் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகளுக்கு 2009-10ஆம் ஆண்டு முதல் தலா ரூபாய் ஒரு இலட்சம் ஊக்க நிதியாக அறிவித்து, அதற்கென அரசு ரூ. 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் முக்கியமான பொறுப்புகளில் ஒன்று நிதி இடையீட்டாளர் பணியாகும். தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகள் வங்கியிலிருந்து பெருங்கடன் பெற்று தங்களது உறுப்பினர் குழுக்களுக்கு கடன் வழங்கலாம். 2010-11ஆம் ஆண்டில் 45 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பல்வேறு வங்கிகளால் ரூ. 11.53 கோடி பெருங்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களிடையே ஒற்றுமை மற்றும் அணிப்பற்றினை மேம்படுத்த ஒவ்வொரு ஆண்டும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் வட்டார மற்றும் மாவட்ட அளவில் கலைப்போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மகளிர் குழு கூட்டமைப்புகளும், சுய உதவிக் குழுக்களும், அவைகளின் உறுப்பினர்களும் மேலும் பல சாதனைகளை படைத்திட வாழ்த்துகிறேன்!

மேலாண்மை இயக்குநர்

இன்றே இரத்த
தானம் செய்வோம்

நான்
இரத்த தானம்
செய்கிறேன்!

நீங்களும்
செய்யலாமே

பாதுகாப்பான இரத்தம், எச்ஐவி எய்ட்சைத் தடுக்கும்

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 2282/2004
Reg. No. TN/CC(S)Dn./64/09-11 & Licensed to Post Under without Prepayment No. 564 / 09 - 11